Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 26 (15.06.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:257

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

308, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

(#/2228)

## இன்றும், நாளையும்

# புலிகளினது கடற்பயணத்துக்கு கடற்படை இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**முல்லைத்தீவிலிருந்து, திருகோணமலைக்கு புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கு கடல் வழியாக, புலிகள் இன்றும், நாளையும் பயணத்தை மேற்கொள்வதற்கு கடற்படை இணக்கம் தெரிவித்துள்ளது.**

**நேற்றுக் காலை நடைபெற்ற படை அதிகாரிகளின் உயர்மட்ட கூட்டத்தையடுத்தே, புலிகளின் கடற்பயனத்திற்கு கடற்படையினரால் அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.**

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கு மூன்று படகுகளில் 90 புலிகள் பயணத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளியன்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

திருகோணமலை செல்லும் படகுகள் 20 ஆம் திகதி வரை தரித்து மீளத்திரும்பும் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடற்படையினர் இதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. திருகோணமலை செல்லும் படகுகள் 24 மணிநேரத்துக்குள் முல்லைத்தீவுக்குத் திரும்ப வேண்டுமெனக் கடற்படை தெரிவித்திருந்தது.

அத்துடன்- விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கிழக்குக்கான கடற்பயணத்தை மேற்கொண்டால், தடுத்து நிறுத்துமாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கடற்படையினருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனால் இரு தரப்புக்குமிடையில் பதற்றமான சூழல் உருவாகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இன்று புலிகள் - படையினர் சந்திப்பு

கடந்த இரண்டாம் திகதி மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் தொடர்ச்சியாக மீளவும் இரு பகுதியினருக்கும் இடையில் இன்று இரண்டாவது சந்திப்பு நடைபெறவுள்ளது.

இன்று காலை 11 மணியளவில் யுத்த சூனியப் பிரதேசத்தில் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறுவ் ஹொவ்டே தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தளபதிகளான ரமணன், ஜனார்த்தனன், ஜெயார்த்தன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், சமாதான செயலக துணைப் பொறுப்பாளர் பவாநந்தன் மற்றும் மனோஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கிளிநொச்சியில் இன்று கலந்துரையாடல்!

(கிளிநொச்சி)

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்களுடனான கலந்துரையாடலை விடுதலைப் புலிகள் இன்று கிளிநொச்சியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும், மேம்பாட்டுக்குமான செயலகத்தில் இன்று காலை 10.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொள்ளும் இந்தச் சந்திப்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் தற்போதைய நிலை குறித்தும், எதிர்கால செயற்பாட்டு வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் போராளிகளை சோதனையிட மன்னாரில் நேற்று படையினர் முயற்சி!

### பொதுமக்களின் எதிர்ப்பால் முறுகல்

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் இருவின் உடமைகளை அத்துமீறிச் சோதனையிட முற்பட்ட இராணுவத்தினருக்கும் - பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டது. இதன்காரணமாக மன்னாரில் நேற்று சிறிதுநேரம் பதற்றமான நிலை காணப்பட்டது.

நேற்று பி.ப.3 மணியளவில் மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எதிரே இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

வன்னியிலிருந்து சென்ற இரண்டு பெண் போராளிகளை இடைமறித்த இராணுவத்தினர் உடமைகளை

மீறி சோதனையிட முற்பட்டபோது போராளிகள் மறுத்தனர். இதனையடுத்து அப்பகுதியில் கூடிய மக்கள் படையினரை சோதனைசெய்ய விடாது தடைசெய்தனர்.

இதன்காரணமாகப் படையினருக்கும் மக்களுக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டது. அந்த இடத்திற்கு மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்

## ஹெயிற்றி செல்லும் இலங்கைப் படையினருக்கு

# ஆண்டுதோறும் 100 கோடி ரூபாவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வன்னியிலிருந்து சென்ற இரண்டு பெண் போராளிகளை இடைமறித்த இராணுவத்தினர் உடமைகளை சோதனையிடப்போவதாக தெரிவித்தனர்.

இதற்கு போராளிகள் தமது உடமைகள், ஏற்கனவே சோதனையிடப்பட்டதாகத் தெரிவித்தனர்.

ஆனால், இதைக் கேளாது பெண் போராளிகளின் உடமைகளை அத்து முறுகல்நிலை ஏற்பட்டது. அந்த இடத்திற்கு மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வந்து இவ்வாறு சோதனைசெய்வது யுத்த நிறுத்த மீறல் எனத் தெரிவித்தார். தொடர்ந்து அங்கு கண்காணிப்புக் குழுவினர் வருகைதந்தனர்.

அங்கும் மக்கள் ஒன்றுதிரண்டதையடுத்து படையினர் விலகிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆண்டுதோறும் 100 கோடி ரூபாவை அரசே சம்பளமாக செலுத்தவேண்டும்!

(கொழும்பு)

ஹெயிற்றி செல்லும் ஐக்கிய நாடுகள் சமாதானப் படையிலுள்ள இலங்கை இராணுவத்தினருக்கான சம்பளமாக - 100 கோடி ரூபாவை இலங்கை அரசாங்கமே செலுத்த வேண்டிய நிலையில் இருப்பதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது..

ஐக்கிய நாடுகள் சமாதான உதவி நடவடிக்கையின் கீழ் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இலகு காலாற் படையினர் 800 பேர் அடங்கிய ஒரு பற்றாலியனை அரசாங்கம் ஹெயிற்றிக்கு அனுப்பவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சமாதானப் படைக்கு இலங்கை இராணுவத்தினரை அனுப்புவதன் மூலம் பெருமளவு வெளிநாட்டு செலாவணி வருமானத்தைப் பெறமுடியும் என்றும் -

இதனைப் பிரசாரமாகப் பயன்படுத்தி இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பை ஊக்குவிக்கமுடியும் எனவும் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

ஆனால், ஐக்கிய நாடுகள் சமாதானப்படையில் உள்ளவர்களுக்கு அந்தநத நாடுகளே சம்பளம் வழங்க வேண்டும் என ஐ.நா. நீதிச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும்,

இதனால், ஹெயிற்றிக்கு அனுப்பப்படவுள்ள 800 படையினருக்கான சம்பளமாக ஒரு வருடத்துக்கு 100 கோடி ரூபாவை செலுத்தவேண்டிய நிலையில் அரசாங்கம் இருப்பதாகவும் அந்தச் சிங்களப் பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

# ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கு பிரித்தானிய பிரதமர் மறுப்புத் தெரிவிப்பு!

(கொழும்பு)

பிரிததானியாவுக்கு உத்தியோகபூர்வமற்ற விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்த போதிலும், அதற்கான இணக்கம் தெரிவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிகா, அன்றிரவே லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவர் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் உள்ளிட்ட தலைவர்களைச் சந்திப்பதற்கான அனுமதியைக் கோரியிருந்தார். ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவை ரொனி பிளேயர் சந்திப்பதற்கு டவுஸில் வீதியிலுள்ள அவரது அலுவலகம் இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஆனால், இந்த விஜயத்தின் போது பிரித்தானிய உள்துறை செயலாளர் ஜக்ஸ்ரோ, ஜனாதிபதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய யூனியனுடன்

# 800 மில்லியன் ரூபா வழங்கும் ஒப்பந்தம் இன்று கைச்சாத்து!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு 800 மில்லியன் ரூபாவை உதவி நிதியாக வழங்க ஐரோப்பிய யூனியன் முன்வந்துள்ளது.

இந்த நிதி உதவியை வழங்குவதற்கான ஒப்பந்தம் இன்று கொழும்பில் கைச்சாத்திடப்படவுள்ளதாக - நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது..

யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்த 3 லட்சம் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கு 2400 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

1400 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி நிகொட் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

மேலும் இதற்குத் தேவைப்படும் 1000 மில்லியன் ரூபாவில் 800 மில்லியன் ரூபாவை ஐரோப்பிய யூனியன் வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி/2489)
EXPOAIR
Your friend in the skies...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை நிர்வாகத்திற்கு எதிராக ஊழியர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தில் பாரிய மோசடிகள் இடம்பெறுள்ளதாகக் குற்றம்சாட்டி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்றுமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் - யாழ். பல்க்லைக்கழகத்தில் நிதிமோசடி, செல்வாக்கைப் பயன்படுத்தி பிரதம பாதுகாப்பு அதிகாரியைத் தெரிவு செய்தமை போன்ற பல்வேறு குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வளாகம் முழுவதும் பல்வேறு கருத்துக்களை கொண்ட சுலோகங்கள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் காணப்பட்ட சுலோகங்கள் சில வருமாறு -

★ பல்கலைக்கழக பேரவைக்கு தேசவிரோதிகள் ஆட்சேர்ப்பு

★ பங்குச் சந்தைப் பேர்வழிகள் பல்கலைக்கழகத்தில் சுரண்டல்

★ பிரதம பாதுகாப்பு அதிகாரி தெரிவு மது, மாது - புரிகின்றதல்லவா தெரிவின் இரகசியம்.

★ இ...ன மீளளிப்புத் தொகை பிறதேவைகளுக்கு போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

தமது பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஊழியர் சங்கப் பிரதிநிதி தமக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும், தமக்கு நியாயமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் மின்சாரம், நீர் போன்ற அத்தியாவசியத் தேவைகளும் துண்டிக்கப் படுமெனவும் தெரிவித்தார்.

நேற்றையதினம் ஊழியர் சங்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த போதும் மாணவர்களுக்கான விரிவுரைகள் எவ்வித இடையூறுமின்றி இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

# சனசமூக நிலையங்களுக்கு விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வலி.வடக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச விசேட பொதுக்கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டம் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத் தில் மாலை 3 மணிக்கு நடைபெற வுள்ளது.


மேற்படி கூட்டத்தில், மீள்குடிய மர்வு - தற்காலிக அரசியல் நிலையில் பொதுப்பங்களிப்பு, உள்ளூ ராட்சி வாரம், அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன குறித்து ஆராயப் படவுள்ளன. அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் கேட்டுள்ளார்.

# வழங்கல் கட்டளைகளை பெறக்கோரிக்கை

யாழ்.மாவட்ட பல.நோ.கூ.சங்கங் கள் தமக்குரிய உலர் உணவு விநியோகத்திற்குரிய வழங்கல் கட் டளைகளை யாழ்.புனர்வாழ்வுப் பகுதிகளில் இன்றிலிருந்து பெற்று விநி யோகத்தினை ஓரிரு தினங்களில் மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செய லக புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# குழாய்க் கிணறு தோண்டியவேளையில் நெருப்பு பிழம்பு தோன்றி 38 பேர் காயம்!

## தமிழ்நாடு திண்டிவனம் அருகே சம்பவம்



வயலில் குழாய்க்கிணறு தோண்டியபோது, நெருப்புப் பிழம்பு வெளியேறியது. இதன்போது தீயில் சிக்கி 38 பேர் படுகாயமடைந்தனர்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் புளிச்சப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த ஏழுமலை (வயது47) இவருக்குச் சொந்தமாக புளிச்சப்பள்ளம் வானூர் எல்லையில் காணி உள்ளது.

இந்த நிலத்தில் தனியார் கம்பனி மூலம் குழாய்க்கிணறு அமைப்பதற்கு ஏழுமலை ஏற்பாடு செய்தார். அதன்படி கிணறு அமைக்கும் கருவிகளுடன்கூடியவாகனம் வரவழைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கிணறு அமைக்கும் பணி தொடங்கியது. 60 அடி தோண்டியபோது தண்ணீர் வந்தது. அதிக ஆழம் தோண்டினால், நீர் அதிகம் கிடைக்கும் என்று கருதி மேலும் ஆழமாக்கும் வேலையில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

இரவு 11.30 மணியளவில் 280 அடி ஆழம் தோண்டியபோது ஒரு விதமான இரைச்சல் காதைச் செவிடாக்கும் அளவுக்குக் கேட்டது. இதனால், கிணறு அமைக்கும் பணி நிறுத்தப்பட்டது.

கிணறு அமைக்க பயன்படுத்தப்பட்ட இரும்புக்கம்பியை வெளியே எடுக்க தொழிலா ளர்கள் முற்பட்டனர். கடினமாக இருந்ததால் மறுநாள் காலை பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுச்சென்றனர்.

கடந்த சனிக்கிழமை காலை 7.45 மணியளவில் மறுபடியும் தொழிலாளர்கள் வந்து துளைபோடும் இரும்புக்கம்பியை எடுத்தனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக கிணற்றிலிருந்து நீரூற்றுப்போல வெப்பநீர் பீய்ச்சியடித்தது. அதைத்தொடர்ந்து நெருப்புப் பிழம்பு வெளியேறியது.

இந்தச் சம்பவத்தில் தொழிலாளர்கள் 13 பேர் தீக்காயமடைந்தனர். வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவர்களும் இந்த விபத்தில் சிக்கினர். இவர்களுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன. தீக்காய எரிச்சல் தாங்காமல் அவர்கள் சிறிது தூரம் ஓடிச்சென்று வயல் வெளியில் மயங்கிக்கிடந்தனர்.

இவர்களின் கூக்குரல் சத்தம் கேட்டதும், கிராமத்து மக்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு ஓடி வந்து, அவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர். அவர்களை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து விசேட சிகிச்சை அளிக்கப்படுகிறது.


கிணற்றிலிருந்து தீப்பிழம்பும், வெப்பநீரும் ஏறத்தாழ இருமணி நேரம் வெளியேறிக்கொண்டிருந்தது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றனர். நெருப்பு பிழம்பு வெளியேறிய கிணற்றுப் பக்கம் யாரையும் நெருங்கவிடாமல் பாதுகாப்பு வழங்கினர்.

இந்தச் சம்பவம் பற்றி தீயணைக்கும் படைக்கு தகவல் அனுப்பப்பட்டதும் அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இருமணி நேரம் தொடர்ந்து குளிர் நீரைப் பாய்ச்சி தீம்பிழம்பு வெளியேறுவதைக் கட்டுப்படுத்தினர்.

கிணறு அமைக்க வந்த வாகனத்தில் 400 லீற்றர் டீசல் இருந்தது. டீசலில் தீம்பிழம்பு பட்டு விபத்து ஏற்படும் சூழ்நிலையை தீயணைப்புப் படையினரின் பெரும் முயற்சியால் தவிர்க்கப்பட்டது.

நெருப்புடன்கூடிய நீரூற்றைப் பார்த்தவர்கள் கூறும்போது, சுமார் 15 அடி உயரம் வரை இரவு 11.30 மணிமுதல் காலை 7.40 மணிவரை வெறும் நீரூற்று ஏற்பட்டதென்றும்,



பின்பு 10 மணிவரை நெருப்புடன் அதாவது, 15 அடி உயரம் வெப்ப நீரூற்றும், அதிலிருந்து 3 அடி நீளத்திற்கு நெருப்புப் பிழம்பு ஒரு வினாடியில் ஏற்பட்டது என்றும், சுமார் 2 மணிநேரம் இந்தப் பிழம்பு நீடித்ததென்றும் கூறினார்கள்.

பூமிக்கு அடியிலிருந்து வாயு கலந்த அமிலம் ஏற்பட்டதனால், இந்த மாதிரி நெருப்புடன்கூடிய நீரூற்று ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

# அதிபர், ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் பி.ப. 1.30 மணிக்கு கைதடி பல.நோ. கூ.சங்க மண்டபம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

எனவே, அந்தந்தப் பகுதிகளில் உள்ள அதிபர், ஆசிரியர்களை மேற்குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

# பிரவச விடுதி புனரமைக்க இலங்கை வங்கி நிதி உதவி!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதிகளின் புனரமைப்பிற்காக மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை இலங்கை வங்கி கடந்த மாதம் வழங்கியுள்ளது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் கலாநிதி நவநீதனிடம் இந்தத் தொகையை இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் வழங்கியுள்ளார்.

இந்தத் தொகைக்குரிய திருத்தப்பணிகள் பிரசவ விடுதியில் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



கடந்த மாதம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 3.5 மில்லியன் ரூபாய் நிதிக்கான காசோலையை இலங்கை வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், வைத்திய நிபுணர் கலாநிதி நவநீதனிடம் வழங்குவதையும், அருகில் வைத்தியசாலை அதிகாரிகள் நிற்பதையும் காணலாம்.

**48 - 1955 இலக்க பாரவூர்திக்கு உடற்கோப்பு அமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்**

இச்சமாசத்தின் 48 - 1955 இலக்க அசோக் லேலண்ட் பாரவூர்தியினது உடற்கோப்பை அகற்றி புதிய உடற்கோப்பு அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உடற்கோப்பு தொடர்பான வேலை விபரங்கள் விபரிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப் பத்திரங்களை ரூ 50/- செலுத்தி சமாச பணிமனை வேலை நாள்களில் முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

உடற்கோப்பு அமைத்தல் தொடர்பான எமது முன்னைய பத்திரிகை விளம்பரத்திற்கமைய விண்ணப்பங்களை அனுப்பிவைத்தவர்களும் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கவேண்டும்.

கேள்விப் பத்திரங்களை 30.06.2004 ஆம் திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக - தலைவர், யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

தலைவர்,
யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2664)

# மண்ணுக்குள் புதைந்திருந்து தவமிருந்த சாமியார் பரிதாபமாக உயிரிழப்பு

(சென்னை)

மதுரை அருகே மண்ணுக்குள் புதைந்து தவம் செய்வதாகச் சொன்ன சாமியார் பரிதாபமாக இறந்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஜெகநாதபுரத்தைச் சேர்ந்தவர் கண்ணன். இவரது மகன் ஆனந்தசாமி. இவர் சிறு வயதிலேயே துறவறம் பூண்டு சாமியாராகி விட்டார்.

சாமியாரான பின்னர் அடிக்கடி தவம் இருப்பது வழக்கம். இந்த நிலையில் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகேயுள்ள குட்லாம்பட்டி அருவி பகுதியில் உள்ள ரமணகிரி ஆசிரமம் அருகே குழி தோண்டி, அதற்குள் தவம் இருக்கப்போவதாக ஆனந்தசாமி அறிவித்தார்.

அதன்படி கடந்த சனிக்கிழமை அவர் பள்ளம் தோண்டி உள்ளே இறங்கினார். ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேல் வெளியே வந்து விடுவதாக அவர் அறிவித்திருந்தார். சாமியார் உள்ளே இறங்கிய பின்னர் மண் மூடப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை அப்பகுதியில் பெரும் கூட்டம் கூடி சாமியார் வெளியே வருவதைக் காணக் காத்திருந்தது.

ஆனால், 10 மணியைத் தாண்டியும் சாமியார் வெளியே வரவில்லை. இதனால் குழப்பமடைந்த கூட்டத்தினர் மண்ணைத் தோண்டிப்பார்த்தனர். அப்போது அமர்ந்த நிலையில் சாமியார் ஆனந்தசாமி இறந்திருந்தார்.

சம்பவம் பற்றி அறிந்த பொலிஸார் சாமியாரின் உடலை மீட்டு வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர். அவர் மூச்சுத் திணறி இறந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

**நிறைஞ்சனஸ்** சங்கானை
இன்றுமுதல விஜய், சுவாதி, ரகுவரன் நடித்த
**செல்வா**
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
General daughter
(சி-2621)

**நாகம்ஸ்** சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட
டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த
**கில்லி**
(தில்ஸ்)



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00
(சி-2622)

**ராஜா** யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த
**ஆய்த எழுத்து**



18 முதல் வீக்ரம், ஜோதிகா நடித்த
அருள்
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும்(பு.நே)
(சி-2623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# இளம் சமூகத்தினரின் போக்கினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

## புதுவை இரத்தினதுரை எச்சரிக்கை



இன்றைய இளம் சமுதாயம் எங்கே போகிறது? என்ன நடக்கிறது? எங்கோ தவறு நடக்கிறது. இதன் விளைவுகள் எதிர்காலத்தில் பாரியதாக இருக்கப் போகிறது. இதனை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு, விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை - வவுனியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூல் வெளியீட்டு விழாவில் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேலு தலைமையில் வவுனியா சுத்தானந்த இந்து கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தேசியக் கொடியை ஏற்றி வைக்க, இரண்டு மாவீரர்கள் மற்றும் போராளிகளின் தந்தையாரான சுப்பிரமணியம் பொது ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை வழங்கினார். சிறப்புரையினை புதுவை இரத்தினதுரை வழங்கினார்.

புதுவை இரத்தினதுரை உரையாற்றும்போது, இன்றைய இளைய சமுதாயத்தினர் சுகமாக வாழலாம் என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். எமக்கு என்ன பிரச்சினை, தாம் உண்டு, தமது வாழ்க்கை உண்டு என்று வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். எமது சமுதாயத்தைக் கெடுப்பதில் தொலைக்காட்சித் தொடர்களும், சினிமாக்களும் பிரதான பங்கு வகிக்கின்றன. இதன் காரணமாக எமது பாரம்பரியம் - கலை - கலாசாரம் சீரழிந்துகொண்டு போகிறது.

கணினிக்கு முன்னால் இருந்து பிள்ளை படிக்கிறது என்று பெற்றோர் நினைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், பிள்ளைகள் கணினிக்கு முன்னாலிருந்து படிக்கிறார்களா அல்லது பாழாகிப் போகிறார்களா என்று பார்ப்பது இல்லை.

பாலியல் சம்பந்தமான இணையத்தளங்கள் இன்று உலகில் 36 இலட்சம் இருக்கின்றன. இவைகளைத்தான் பிள்ளைகள் பார்க்கின்றனர். இதனைப் பெற்றோர் கவனிப்பதாக இல்லை என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம் முதற் பிரதியை வழங்க, குடியிருப்பு பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள் கந்தசாமி பெற்றுக்கொண்டார்.

இந்த நூலின் சிறப்புப் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் வெளியிட்டு வைக்க, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வன்னி மாவட்ட தலைவர் செந்தில்நாதனும், யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதி நந்தகோபாலும், வவுனியா வடக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆலோசகர் ஜெயச்சந்திரனும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து, புத்தகத்தின் மதிப்பீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதி நந்தகோபால் மற்றும் வவுனியா வடக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆலோசகர் ஜெயச்சந்திரன் ஆகியோர் வழங்கினார்கள். நன்றி உரையினை எஸ்.என்.ஜீ நாதன் வழங்கினார்.

## சமாதானப் புறா இறந்தநிலையில் வீழ்ந்தது

பல்தேசிய இராணுவ பயிற்சிப் பட்டறையின்போது அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா கழுத்து முறிந்த நிலையில் இறந்து வீழ்ந்தது.

குக்குலே கங்கவிலுள்ள இராணுவ முகாமில் இடம்பெற்ற பல்தேசிய படையினர் கலந்துகொண்ட இராணுவ பயிற்சிப் பட்டறையின் போது, அமெரிக்காவின் ஆசியப் பிராந்திய கட்டளைத் தளபதி, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மற்றும் பலர் கலந்து கொண்டதோடு, நிகழ்வின் ஆரம்பமாக சமாதானப் புறாக்களையும் வானில் பறக்கவிட்டனர்.

இப்பயிற்சிப் பாசறை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புத்தசாசன அமைச்சரும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் துறையின் பிரதியமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்காவால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா வானில் பறந்த சில நொடிகளில் கழுத்து முறிந்த நிலையில் இறந்து வீழ்ந்தது.

## பிக்குகளைத் தாக்கியவர்களில் —

# 2 அமைச்சர்கள், 2 பிரதி அமைச்சர்கள்; பொலிஸ் விசாரணையில் சாட்சியம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகள் இருவர் மீது தாக்குதல் நடத்தியவர்களில் இரண்டு அமைச்சர்கள், இரண்டு பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் பெயர்கள் பொலிஸ் விசாரணைகளின்போது பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார கேட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் குறித்து, சொலிசிற்ரர் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா மற்றும் பிரதி சொலிசிற்ரர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோரின் ஆலோசனைகளை கடந்த வாரம் பொலிஸார் பெற்றிருந்தனர்.

பொலிஸ் அத்தியட்சகர் உதய பால இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

சபாநாயகர் லொக்கு பண்டாரவினதும், படைக்கல சேவிதர் விஜய பாலிய குருகேயினதும் சாட்சியங்களைப் பொலிஸார் பதிவுசெய்துள்ளனர். அத்துடன், நாடாளுமன்ற சம்பவங்கள் அடங்கிய வீடியோ நாடாவையும் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

அத்துடன், காயமடைந்த பிக்குகள் இருவரின் சாட்சியங்களும் பொலிஸாரால் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

பொலிஸாரிடம் சாட்சியமளித்த வண. தயாரத்ன தேரோ - தான் பதவியேற்கச் சென்றபோது, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்க வழிமறித்துத் தடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா - விளையாட்டு, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் சிறிபதி சூரியாராச்சி, மின்சக்தி, சக்திவள பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் தன்னைக் கைகளால் தள்ளியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# உயர் வரிசைப் பதவியை சந்திரிகா வழங்கவுள்ளாராம்

## ரிரோன் பெர்னாண்டோ கூறுகிறார்

(கொழும்பு)



தனக்கு உயர்வரிசைப் பதவியொன்றை வழங்குவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக, ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த உயர்பதவி குறித்து, ஜனாதிபதி தன்னுடன் கலந்துரையாடியுள்ளதாகவும், அதைப்பற்றி தற்போது ஊடகங்களுக்கு எதனையும் தெரிவிக்கப்போவதில்லையெனவும், அவர் தெரிவித்தார்.

என்னிடமிருந்து பயன்பாட்டைப் பெற்றுக்கொண்டதாக ஜனாதிபதி கூறியதாலேயே, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டேன் எனவும்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நான் சவாலாக இருந்த காரணத்தினாலேயே அவர் தன்னை தேசியப்பட்டியல்மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்காமல் ஏமாற்றியதாகவும் குறிப்பிட்டார்.

## புதிய பாதுகாப்புத் திட்டத்திற்கு

# கட்டுப்படாத கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதற்கு மறுப்பு!

துறைமுக பாதுகாப்புத் திட்டத்திற்குக் கட்டுப்படாத கப்பல்கள்- கொழும்புத் துறைமுகத்துக்குள் உட்பிரவேசிக்க அனுமதியளிப்பதில்லை என, துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

சர்வதேச சமுத்திர வளங்கள் சபை - எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியில் இருந்து, உலகத்தின் அனைத்துத் துறைமுகங்களிலும் உரிய பாதுகாப்பைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நடைமுறையை அமுல்படுத்தவுள்ளது.

இதனடிப்படையில், இன்று முதல கொழும்பு துறைமுகத்திலும் சர்வதேச கடல்வள பாதுகாப்புத் திட்டம் அமுல் செய்யப்படும். இதனடிப்படையில் கொழும்பு உட்பட நாட்டின அனைத்துத் துறைமுகங்களினதும் பாதுகாப்பு கடற்படையினர் வசம் ஒப்படைக்கப்படும்.

இதுவரை இந்தப் பாதுகாப்புக்களை துறைமுக அதிகாரசபை மேற்கொண்டு வந்தது. இதேவேளை கட்டுநாயக்க விமானத் தளப் பாதுகாப்பும் மீண்டும் விமானப் படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சர்வதேச விமானப் பயணிகள் அமைப்பின் வேண்டுகோளின் பேரில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் விமானநிலையப் பாதுகாப்புக் கடமைகளிலிருந்து, விமானப் படையினர் நீக்கப்பட்டனர். சர்வதேச விமான தளங்களைப் பொறுத்தவரையில், கட்டுநாயக்கவில் மாத்திரமே விமானத்தளத்தையொட்டி விமானப்படையின் தளமும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன்காரணமாகவே கட்டுநாயக்க விமானத் தளம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தமையும் சர்வதேச விமான பயணிகள் அமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது.

எனினும், விமானப் படையினர் விமான நிலைய பாதுகாப்பிலிருந்து விலகியதையடுத்து, அங்கு சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதன் காரணமாகவே மீண்டும் விமானப்படை, விமான நிலையப் பாதுகாப்பை பொறுப்பேற்றிருப்பதாக அறிவித்திருக்கிறது. (01)

# காலாவதியான உணவுப் பொருட்கள் கொழும்பு மட்டக்குளியில் கண்டுபிடிப்பு

கொழும்பு மட்டக்குளி பிரதேசத்திலிருந்த விற்பனை நிலையக் களஞ்சியம் ஒன்றிலிருந்து, பல இலட்சம் ரூபா பெறுமதியான காலாவதியான உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரின் மற்றும் பக்கட்டுக்களில் அடைக்கப்பட்டிருந்த இந்தப் பொருட்கள் காலாவதியான போதும், அவற்றுக்குப் புதிய திகதிகள் அச்சிடப்பட்டு மீண்டும் சந்தைப்படுத்துவதற்குத் தயாரான நிலையில் இருந்தபோதே, இவை மட்டக்குளிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்தக் களஞ்சியசாலையின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ளபோதிலும், இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இவ்வாறு புதிய திகதிகள் அச்சிடுவதற்கு இரசாயனப் பொருள் ஒன்று பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

இவ்வாறு பெருந்தொகையான காலாவதியான பொருட்கள் பொய்யான திகதியுடன் விற்பனைக்கு விடப்படும் களஞ்சியமொன்று, கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இதுவே முதலாவது நிகழ்வென வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

கொழும்பு மாநகரசபை அதிகாரி ஒருவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் -

இது பாரிய குற்றச்செயல் என்பதால், சரியான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளுக்கு சரியான தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - இந்தக் களஞ்சியசாலையிலிருந்து விற்பனைக்கு விடப்பட்டுள்ள பல - உணவுப் பொருட்கள் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்றிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

# நாட்டைப் பலிகொடுக்கும் முயற்சிகளை தோற்கடிக்க ஹெல உறுமய தயாராம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் நாட்டை பலிகொடுக்கும் முயற்சிகளை தோற்கடிப்பதற்குத் தயாரென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இடைக்கால சுயாட்சி நிலைப்பாட்டின் கீழ் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகி வருவதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததை தற்போது மறந்துபோயுள்ளன

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசத்துரோகமான வேலைத் திட்டங்களையே தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் அரசாங்கம் [illegible] செல்வதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் ஜே.வி.பி. தொழிற்சங்கம் அமைப்பு

வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஜே.வி.பி கட்சியினரால் புதிய தொழிற்சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக்கு வருகைதந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தத் தொழிற்சங்கத்தை நிறுவியுள்ளனர்.

இதற்கான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காலை வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் நடைபெற்றுள்ளது.

இந்தத் தொழிற்சங்கத்தின் தலைவராக ரி.பத்மநாதன், செயலாளராக எல்.எஸ்.டி.பெரேரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரோ - 2004 உதைபந்தாட்டம்:

# பலமிக்க இங்கிலாந்து அணியை பிரான்ஸ் அணி தோற்கடித்தது!



(லிஸ்பன்)

யூரே - 2004 உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் 'பி' பிரிவு ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை பிரான்ஸ் 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த அதேவேளை -

'பி' பிரிவின் இன்னொரு ஆட்டத்தில் சுவிற்சர்லாந்து - குரோஷிய அணிகளுக்கிடையிலான ஆட்டம் வெற்றி தோல்வியின்றியும் முடிவுற்றது.

'பி' பிரிவின் முதலாவது ஆட்டம் குரோஷிய - சுவிற்சர்லாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

ஆட்டம் ஆரம்பித்த நேரம் முதல் இரு அணிகளும் ஆக்ரோஷமாக விளையாடின. குரோஷிய அணி பந்தைத் தனது கட்டுப்பாட்டில் அதிக நேரம் வைத்திருந்தது.

இரண்டு அணி வீரர்களும் முரட்டுத்தனமாகவும் விதிமுறைகளுக்கு மாறாகவும் விளையாடினர்.

இதனால் குரோஷிய அணி வீரர்கள் நால்வருக்கும் சுவிற்சர்லாந்து வீரர்கள் மூன்று பேருக்கும் மஞ்சள் அட்டை காண்பித்து போட்டி நடுவர் எச்சரித்தார்.

முன்பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் எதனையும் போடவில்லை. இதனால் இரண்டாவது பாதி ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சுவிற்சர்லாந்து அணி வீரர் வொகெல் முரட்டுத்தனமாக - விதிமுறைகளை மீறி ஆடியதால் மைதானத்தை விட்டு நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதனால் சுவிற்சர்லாந்து அணி பத்து வீரர்களுடன் ஆடியது. ஆயினும் இரண்டு அணிகளுமே ஆட்ட



நேரம் முடியும்வரை கோல் எதையும் போடமுடியாத நிலையில், ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. இதனால் தலா ஒரு புள்ளியை இரு அணிகளும் பெற்றன.

இந்தப் போட்டியை சுமார் 25 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்டனர்.

இரண்டவாது போட்டி வலுவான இரண்டு அணிகளான பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் இடம்பெற்றது.

ஐரோப்பிய நேரம் நள்ளிரவு 12.15 மணியளவில் ஆரம்பமான இந்தப் போட்டி மிகவும் பரபரப்பானதாக அமைந்திருந்தது.

முதற்பாதி ஆட்டத்தின்போது - இங்கிலாந்து அணிக்கு ' பிறி கிக்' மூலம் கோல் அடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், இங்கிலாந்து வீரர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

ஆட்டம் ஆரம்பித்த 38 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரமான டேவிட் பெக்காம், தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு கோலை அடித்தார். இதன்மூலம் இங்கிலாந்து 1-0 பெற்று முன்னணி பெற்றது.

ஆனால், ஆட்டத்தின் இரண்டாவது பாதியில், பிரான்ஸ் வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடினர். பிரெஞ்சு அணியின் கப்டன் ஷிடேன் அபாரமாக ஆடி இரண்டு கோல்களை அடித்தார்.

இதனால் ஆட்டநேர முடிவில் 2-1 என்ற அடிப்படையில் பிரான்ஸ் அணி இங்கிலாந்தை வெற்றிகொண்டது.

இந்தப் போட்டியில் பிரான்ஸ் அணி வீரர்கள் இருவரும், இங்கிலாந்து அணி வீரர்களும் மஞ்சள்



அட்டை காண்பிக்கப்பட்டு நடுவரால் எச்சரிக்கப்பட்டனர்.

64 ஆயிரம் ரசிகர்கள் இந்தப் போட்டியைப் பார்வையிட்டனர்.

# அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டி; யூனியன் கல்லூரி அணி சாதனை!

யாழ். பாடசாலைகளுக்கு இடையிலான அஸ்ரா கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் 16 வயதுக் குட்பட்ட அணிகளுக்கு இடையிலான போட்டியொன்றில் யூனியன் கல்லூரி அணி 306 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக் கெதிரான போட்டியொன்றிலேயே இந்த அதிகூடிய ஓட்டங்களை யூனியன் கல்லூரி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யூனியன் கல்லூரி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

யூனியன் கல்லூரி தனது முதல் இனிங்ஸில் எட்டு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 306 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஓட்ட எண்ணிக்கையை 88 ஓவர்களில் யூனியன் கல்லூரி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கே.ஸன்ஜோய் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும், எஸ். கவிராஜ் 73 ஓட்டங்களையும், ரா.டக்ஸசாஜன் 33 ஓட்டங்களையும் யூனியன் கல்லூரி அணி சார்பாக அதிகூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 5 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் நிறைவுக்கு வந்தது. 36 ஓவர்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இந்த 165 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஆர்.பிரணவரூபன், கபில்ராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்த ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.




# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று!

(தொண்டமனாறு)

தொண்டமனாறு கலைவாணி சனசமூக நிலையத்தின் மறைந்த உறுப்பினர்கள் நினைவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகள் இன்று கலைவாணி விளையாட்டுக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றிரவு 7.30 மணிமுதல் மின்னொளியில் நடத்தப்படவுள்ள போட்டிகளில் செற்றப் அணிகளான கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

ஆறுபேர் கொண்ட போட்டியில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி குணசேகரம் விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது.

நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டமும் இறுதி ஆட்டமும் ஒரேயடியாக நடத்தப்படவுள்ளதாகவும் இந்தப் போட்டியில் பங்குபற்றும அணிகள் இன்றிரவு மைதானத்திற்கு சமுகமளித்தல் வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# போர்த்துக்கல் தோல்விக்கு பயிற்சியாளர் பொறுப்பேற்பு!

யூரோ-2004 துவக்கப் போட்டியில் போட்டிகளை நடத்தும் போர்த்துக்கல் அணி, கிரீஸ் அணியிடம் தோல்வி அடைந்ததற்கு போர்த்துக்கல் அணியின் பயிற்சியாளர் லூயிஸ் பிலிப் ஸ்கோலரி மன்னிப்பு கேட்டுள்ளார்.இந்த அதிர்ச்சி தோல்வி குறித்து பேட்டியளித்த ஸ்கோலரி கூறுகையில்; 'கிரீஸ் அணிக்கு எதிரான போட்டியில் தோல்வி அடைந்ததற்கு நான் மன்னிப்பு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் போட்டியில் போர்த்துக்கல் அணி விளையாடிய விதத்திற்காகவும் மனிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தோல்வியால் நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன். வீரர்களும் சோர்வடைந்துவிட்டனர்.

இதுபோன்ற முக்கிய சாம்பியன் போட்டிகளில் விளையாடப்படும் 3 போட்டிகளில் ஒன்றில் மட்டுமே தோற்கலாம். அதன் அடிப்படையில் நாங்கள் ஒரு போட்டியில் தோல்வி அடைந்துவிட்டோம்.

எங்களுடைய அடுத்த போட்டி வாழ்வா? சாவா? போட்டியாகும். இப்படித்தான் அடுத்த போட்டியை நாங்கள் எதிர்கொள்ள உள்ளோம் என்று கூறினார்.

போர்த்துக்கல் அணி நாளை நடைபெறும் போட்டியில் ரஷ்யாவை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி லிஸ்பனில் நடைபெறுகிறது.

# நியூசிலாந்துடனான 3 ஆவது டெஸ்டையும் இங்கிலாந்து அணியினர் கைப்பற்றினர்!

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையேயான இறுதி மற்றும் 3 ஆவது டெஸ்ட் போட்டி டென்ட்பிரிஜ்ஜில் நடைபெற்றது.

இதில் முதல் இனிங்ஸில் நியூஸிலாந்து அணி 384 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து தனது முதல் இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தது.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸை ஆடிய நியூஸிலாந்து அணி 3 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டம் எடுத்திருந்தது.

நான்காவது நாள் ஆட்டம் தொடர்ந்தபோது இங்கிலாந்து வீரர்களின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் 218 ஓட்டங்களில் நியூசிலாந்து சுருண்டது.

அந்த அணியில் ரிட்சர்ட்சன் 49 ஓட்டமும், பிளமிங் 45 ஓட்டமும், மக்கலம் 39 ஓட்டமும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் ஜைல்ஸ் 4 விக்கெட்டும், ஹர்மிசன், சாகர்ஸ் தலா 3 விக்கெட்டும் எடுத்தனர்.

289 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இங்கிலாந்து அணி, 71.3 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணியின் வீரர் தோர்ப் அபாரமாக ஆடி சதம் அடித்தார். அவர் 13 பவுண்டரிகளுடன் 104 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். புட்சர் 59 ஓட்டமும், ஜைல்ஸ் 36 ஓட்டமும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இங்



கிலாந்து டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஏற்கனவே அந்த அணி முதல் 2 ஆவது போட்டியில் வெற்றி பெற்றிருந்தது. ஆட்ட நாயகனாக தோர்ப் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர் நாயகன் விருது இங்கிலாந்து வீரர் ஹர்மிசனுக்கும், நியூஸிலாந்து வீரர் ரிச்சர்ட்சனுக்கும் வழங்கப்பட்டது.

# முத்தரப்புத் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு!

இங்கிலாந்து நியூஸிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் கலந்துகொள்ளும் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது.

இந்த முத்தரப்புத் தொடருக்கான 14 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் வேகப்பந்து வீச்சாளரான சாஜித் மெகமூத் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் இடம்பெற்றிருந்த றொபர்ட் கீ, இந்த சீசனில் உள்நாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதால்தான் முத்தரப்புத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் 4 ஆவது டெஸ்டின் போது ரீட்டுக்குப் பதிலாக விக்கெட் காப்பாளராகப் பொறுப்பேற்ற ஜெனரன்ட் ஜோன்ஸ், தற்போது நடைபெற்றுவரும் நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2 ஆவது டெஸ்ட்டில் சதம் அடித்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரிலும் விளையாடிய ஜோன்ஸ், எதிர்வரும் முத்தரப்பு தொடருக்கான இங்கிலாந்து அணியிலும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆரம்பப் போட்டியில் இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகள் ஓல்ட்டிராபோர்டில் நடைபெறும் போட்டியில் மோதவுள்ளன.

மைக்கல் வோகன் (கப்டன்), ஜேம்ஸ் அண்டர்சன், பிளாக்வெல், கோலிங் வூட், பிளின்டொப், ஆஷ்லே கெய்ல்ஸ், டேரன் காப், ஸ்டீவ் ஹர்மிசன், ஜெரைன்ட் ஜோன்ஸ், றொபர்ட் கீ, சாஜித் மெகமூத், அன்ரனி மெக்ராத், ஸ்ட்ராஸ், ட்ரெஸ்கோதிக் ஆகியோர் இங்கிலாந்து அணியின் வீரர்களாவர்.

## கே.சி.சி. கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படும் கே.சி.சி. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி இவ்வாண்டும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான அணி ஒழுங்குத் தெரிவு நாளை பிற்பகல் 5 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தில் நடைபெறவுள்ளது.



1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி மண்டைதீவுக் கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞபகார்த்தமாக நடத்தப்பட்ட 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்கென்றிசியன் அணியை 3 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற நாவாந்துறை சென்மேரிஸ் அணியினர் வெற்றிக்கிண்ணத்துடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாவட்ட

# புனித நகர் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு

# அப்பட்டமான இனவாதத்தின் வெளிப்பாடே

## ரெலோ இயக்கம் கண்டனம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத் தில் புனித நகர் சம்பந்தமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு தமிழ் மக்களுக்கு எதிரான அப்பட்டமான இனவாதத்தின் வெளிப்பாடு என தமிழீழ விடுதலை இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட செயலாளர் கு.ரவீந்திரராஜா வெளியிட்டுள்ள, உதட்டிலே தேனும் உள்ளத்திலே நஞ்சும், என்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத் தில் புனித நகராக பிரகடனப்படுத்த வேண்டியதும், பாதுகாக்கப்பட வேண்டியதும் திருக்கோணேஸ்வரர் ஆலயமும் அதனைச் சூழவுள்ள கோட்டைப் பிரதேசமும் ஆகும். இதனைப் புனித இடமாக பிரகடனப் படுத்த வேண்டுமென பல வருடங்களாக கோரிக்கை விடப்பட்டு வருகின்றது. ஆனால் இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காத பேரினவாத ஆட்சியாளர்கள் புனித பிரதேசத்தைச் சீகுலைத்து பௌத்த பேரினவாத சூழலொன்றை கட்டியெழுப்புவதற்கு அப்பட்டமான பல்வேறு முயற்சிகளையும்மேற்கொண்டு வருவதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவதுடன் சர்வதேசமும் அறிந்து வைத்துள்ளது.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலைப் பிரதேசம் இன்று கருவாடும் மீனும் குவித்து வைத்து வியாபாரம் செய்யும் இடமாக மாற்றப்பட்டுள்ளது. துள்ளியோடிய புள்ளி மான்கள் மறைந்து சொறிபிடித்த நாய்கள் கூட்டம் கூட்டமாக ஓலமிடும் காட்சியைப் பார்க்க முடிகின்றது.

இந்துக்களால் புனித தீர்த்தம் என பூசிக்கப்படும் பாபநாச தீர்த்தம் இன்று இராணுவ அணிவகுப்பு நடைபெறும் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது.

திருகோணமலையில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் இருந்து தீர்த்தமாட செல்கின்ற கடற்கரைப் பிரதேசம் இன்று சமுத்திரகம என்று பெயர் சூட்டப்பட்டு அத்துமீறிய வெளிமாவட்ட சிங்கள குடியேற்றங்களால் நிரம்பி வழிகின்றது. இவையாவற்றையும் செயல்படுத்துகின்ற பேரினவாதத்தின் தலைவியாகிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் வெளியிட்ட, வர்த்தமானி அறிவித்தல் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்த கொட்டியாரப்பற்று பிரதேசத்தில் தமிழ் மக்களை பலாத்காரமாக வெளியேற்ற வைத்து திட்டமிட்ட உருவாக்கப்பட்ட சேருவில பிரதேசத்தின் ஒரு பகுதியையும் பூர்வீக தமிழ் கிராமமான திரியாயின் ஒரு பகுதியை மட்டும் புனித இடமாக பிரகடனப்படுத்தி அப்பிரதேசத்தில் எவ்விதமான கட்டிட வேலைகளையும் புனரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது. என விதித்துள்ள தடையானது தமிழ் மக்களுக்கு எதிரான பிரகடனமாகவே கருதுகின்றோம்.எனவே, ஜனாதிபதி இவ்வாறான நடவடிக்கைகளைச் செய்யக் கூடாதென தமிழ் மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் தேசியம் எதிர்பார்க்கும் சமாதானத்தை தருவதாக கூறிக் கொள்ளும் ஜனாதிபதியின் பேச்சில் உண்மை இருக்குமாக இருந்தால் திருக்கோணேஸ்வரார் ஆலயத்தையும் அதன் சூழவுள்ள பிரதேசத்தையும் புனித நகராக பிரகடனப்படுத்தி பௌத்த பேரினவாத நடவடிக்கைகளை நிறுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை உடனடியாக தடை செய்ய வேண்டுமென திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் சார்பிலும் தமிழ் தேசியத்தின் சார்பிலும் கெட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# தள்ளாடி அந்தோனியாரின் திருவிழா சிறப்பாக நடந்தது

மன்னார் தள்ளாடி புனித அந்தோனியார் தேவாலய வருடாந்தத் திருவிழாவின் இறுதிநாள் நேற்று முன்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்தத் திருவிழாவில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். எனத் தெரியவருகிறது. நேற்றுமுன்தினம் 7.30 மணிக்கு அருட்தந்தை யேசுதாசன் தலைமையில் திருவழிபாடுகள் நடைபெற்றன.

இந்த அந்தோனியார் கோவில் திருவிழாவினை முன்னிட்டு தனியார் பஸ் சேவைகள் மன்னாரில் நிறுத்தப்பட்டு அனைத்தும் தேவாலயம் நோக்கி இலவசப் பணிகளை மேற்கொண்டன.

கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இந்தமுறை அதிகமானளவில் பக்தர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

# அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து மருதங்கேணியில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கான ஜி.ரி.இசற் நிறுவனம் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களை இனங்காணும் பொருட்டு இன்று காலை 10 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது.

இதில் கிராம அலுவலர்களை தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன், இதில் ஜி.ரி.இசற் நிறுவன அதிகாரி கலந்துகொண்டு திட்டங்கள் பற்றி விளக்கமளிப்பார்.. (17)

# சிற்றி அன்கில்ஸ் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் லண்டன் சிற்றி அன்கில்ஸ் தரச் சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதால் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் உள்ள தொழில் நுட்பக்கல்லூரிகளில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்துப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் கொழும்பு, இந்தியா முதலாக வெளியிடங்களுக்குச் சென்றே இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்ய முடிந்தது. இதனால், வறிய மாணவர்களால் அது முடியாத ஒன்றாகவே இருந்தது.

தற்போது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இந்தக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படுவதன் மூலம் மேலும் பல சிரமங்களும், வீண் செலவுகளும் தவிர்த்துக்கொள்ளப்படுவதுடன் தரமான சான்றிதழை யாழ். மாவட்ட இளைஞர், யுவதிகள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அதுமட்டுமன்றி இந்தச் சான்றிதழ்மூலம் வேலை வாய்ப்புக்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அடுத்தமாதம் 24 ஆம் திகதியளவில் ஆசியப்பிராந்திய சிற்றி அன்கில்ஸ் வதிவிடப் பிரதிநிதி வருகைதந்தபின்னர், ஏற்கனவே தொழில்நுட்பக்கல்லூரிகளில் சான்றிதழ்பெறாதவர்களுக்கான சிற்றி அன்கில்ஸ் சான்றிதழ் நெறியைக் கற்க வசதிசெய்து கொடுக்கப்படவுள்ளது.

தற்போது யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின்கீழ் எஸ்.ரி.பி. கணினி நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த நிறுவனத்திலேயே சிற்றி அன்கில்ஸ் பாடநெறிக்கான கணினிக் கற்கைகள் கற்பிக்கப்படவுள்ளன. இதற்கு தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவும் கணினிப்பற்றாக்குறையும், கற்பிப்பதற்கான ஆசிரியர் வளப்பற்றாக்குறையாலுமே இந்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பாட நெறிக்கான விண்ணப்பங்களை யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியிலேயோ அல்லது எஸ்.ரி.பி கணினி நிறுவனத்திலோ பெற்று பூர்த்தியாக்கி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## மின்சாரம் தடைப்படுவதால் மாணவர்களுக்குச் சிரமம்

(ஆழியவளை)

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

கடந்த சில நாட்களாகத் தினமும் இரவு 7 மணிக்குப் பின்னர் இந்தப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனால், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

# உளப்பாதிப்படைந்த மாணவர்களை கையாள்வதற்கு ஆசிரியருக்கு பயிற்சி

மத்திய கல்வி அமைச்சினதும், மாகாணக்கல்வி அமைச்சினதும் வேண்டுகோளின் படி வடக்கு- கிழக்கில் உளப்பாதிப்பிற்குள்ளான ஆரம்ப வகுப்பு மாணவர்களைக் கையாள்வதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கும் ஒரு திட்டத்தினை ஜி.ரி.இசற் நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டிற்குள் 150 உளவளத்துணையாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி பெறுவதற்குரிய ஆசிரியர்களை கோட்டக்கல்வி அதிகாரிகளின் சிபார்சின் அடிப்படையில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் தெரிவு செய்யவுள்ளனர்.

இந்தப் பயிற்சி திட்டத்திற்கு யாழ். வலய கோட்ட மட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஜுன் 14 ஆம் திகதி முதல் ஜுன் 21 ஆம் திகதி வரை யாழ்.கல்வி வலய மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (58)

# நிகொட் நிறுவன நிதி உதவியுடன் இரு பாடசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நிகொட் நிறுவன உதவியுடன் தென்மராட்சிப் பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன. இதற்காக 12 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, மற்றும் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே திருத்தியமைக்கப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் அழிந்து போயிருக்கும் கட்டடங்களுக்குப் பதிலாக மாடிக்கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. அத்தோடு சிறந்தமுறையில் மலசலகூட வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அனலைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்துறை, மருதங்கேணி, நயினாதீவு முதலான பகுதிகளிலுள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு புதிதாக 23 லட்சம் ரூபாய் பெறுமதியான மின் சேமிப்புக் கலங்கள் வழங்கப்பட்டு அதனூடாக மின்சாரம் பெறுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் யாழ்.செயலகத்தில் இயங்கும் நிகொட் நிறுவனத்தின் திட்டமிடல் அதிகாரி தெரிவித்தார். (ப)

## இலக்கிய அவை அங்குரார்ப்பணம்

திருமறைக் கலாமன்றத் தமிழ் இலக்கிய அவை மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இலக்கிய அவையின் தலைவராக இளைஞர் அவையைச் சேர்ந்த அ.தயான் தெரிவு செய்யப்பட்டார்.

ஒவ்வொரு மாதமும் இலக்கியக் கருத்தரங்குகள், ஆய்வுகள், நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (111)

## ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இரதோற்சவம் 24 ஆம் திகதியும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். பிரதம குருவாக ... சாரியதிலகம் து.விவேகானந்தக் குருக்கள் செயற்படுவார். (111)



பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்துகொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோக்களை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இராம நாதன் கல்லூரி அதிபரிடமும், உடுவில் மகளிர் கல்லூரி அதிபரிடமும் கையளிப்பதை படத்தில் காணலாம்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நான்காவது அகவையில்



பெயர் :சி.தேனுஷா
முகவரி : தம்பகாமம், பளை.

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்பு நீக்கம் இனி இல்லை




மார்புப் புற்றுநோய் சிகிச்சை முறைக்கு வந்திருக்கின்ற ஒரு புதிய வகை. இது ஓரளவு பக்க விளைவுகளை குறைக்கக்கூடியதாக அமைந்திருக்கின்றது. தற்போது வைத்தியர்கள் மார்பு புற்று நோய் சிகிச்சைக்கு அப்படியே மார்பை அகற்றி விடுதல் சிறந்தது என கூறுகிறார்கள். ஆனால், அண்மையில் செய்து முடிக்கப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, இப்படியான சிகிச்சைமுறை தேவையற்றவை என கூறப்படுகிறது.

ஆனால், மார்புப் புற்றுநோய் காணப்படுகின்ற அந்த இடத்தை, துல்லியமாக எடுத்து - அதிலே கதிர்வீச்சு முறையை பாவிப்பதன்மூலம், புற்றுநோய்க் கிருமிகளை அழிக்கமுடியும். இந்தச் சிகிச்சைமுறை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. இந்தக் கதிர்வீச்சு முறையினை பாவிக்கும் பொழுது - மிகவும் துல்லியமாகவும், அவதானமாகவும் செய்யவேண்டும். ஏனெனில், மற்ற இடங்களுக்கும் இது பரவக்கூடிய வாய்ப்புள்ளது.

ஆயிரம் பெண்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, 500 பேருக்கு இது வெற்றியளித்துள்ளது. குறிப்பாக - அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த சிகிச்சை முறையினால் பெண்கள் மார்பு புற்றுநோயிலிருந்து தங்கள் மார்புகளை இழக்காமல் இருப்பதற்கான வழி பிறந்திருக்கிறது. ஆனால், இங்கிலாந்தில் மட்டும் 38,000 புதிய புற்றுநோயாளர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த கதிர்வீச்சு சிகிச்சை முறைக்கு பயந்து பெரும்பாலனவர்கள் இந்த மார்புப் புற்றுநோயில் தங்களது மார்புகளை இழந்து கொண்டிருக்கிறார்கள்.


# பாலுடன் உணவு

உலகரீதியில் நல்ல உணவுகளுக்குப் பெயர்போன மக்டொனால்ட் நிறுவனம் தற்போது டிஜிற்றல் இசைமூலம், தன்னுடைய வாடிக்கையாளர்களைக் கவரப்பார்க்கின்றது.




மிகப்பெரியளவில் உணவைக் கொள்வனவு செய்பவர்களுக்கு, இந்த நிறுவனம் இலவசமாக இசைத்தட்டுக்களை வழங்குகின்றது. இதற்காக இந்த நிறுவனத்துடன், சொனி நிறுவனமும் சேர்ந்து மிகச்சிறந்த நல்ல பாடல்களை இந்த நிறுவனத்துக்கு வழங்குகின்றது.

இந்தத் திட்டம் உடனடியாக அமெரிக்காவின் எல்லா மாநிலங்களிலும் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. அடுத்து சில மாதங்களில் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றுக்கும் இந்தத் திட்டம் வரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.



சொனி நிறுவனங்களுடைய தகவல்களின்படி, ஏறக்குறைய 500,000 டராக்டுகள் எடுத்த எடுப்பில் மக்களிடம் போய்ச்சேர்ந்து விட்டன.

இதன் காரணமாக இசை உலகில் சரிந்து போயிருந்த தன்னுடைய மார்க்கட்டுகளை, சொனி நிறுவனம் நிமிர்த்துவ தற்கு மக்டொனால்ட் நிறுவனம் உதவியிருக்கின்றது.

மக்டொனால்ட் நிறுவனம் இதனுடன் மட்டும் நிற்கத்தயாராக வில்லை. அடுத்து தொலைக்காட்சி விசிடிகளையும், இலவசமாக உணவுடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகினறது.

# ஆட்டிக்கில்




மிகவும் குளிராகக் காணப்படுகின்ற முனைவுப்பகுதியான ஆர்ட்டிக் பகுதிகளிலேயும், சில காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆர்ட்டிக்கடல் முழுவதும் நீருக்குப் பதிலாக ஐஸ்கட்டிகளே நிறைந்து காணப்படுகின்றது.

## குளிர் மட்டுமல்ல

ஆனால், இவற்றினை எல்லாம் தாண்டி கப்பல்கள்மூலம் ஆராய்ச்சி செய்வது என்பது மிகவும் கடினமான காரியமாகத்தான் இருக்கின்றது.


ஆர்ட்டிக் கண்டத்துக்குள் வருகின்ற சைபீரியா மற்றும் கிரீன்லாந்து ஆகிய தீவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, அங்கே வருடம் முழுவதும் குளிரான காலநிலை இல்லை. வேறு சில காலநிலை மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன.



இது விஞ்ஞானிகளிடையே மிகுநத பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. "வைட் விக்கிங்" என்ற கப்பல் இத்தகைய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றது. இதனுடைய கருத்துப்படி, ஐஸ்கட்டிகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அவை - அமைந்துள்ள விதத்தில் சில வேறுபாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அத்துடன், இத்தகைய ஐஸ்கட்டிகளை உடைத்துப்பார்க்கும் பொழுது, அவற்றின் உள் வெப்பநிலை வித்தியாசப்படுகின்றது. ஆகவே, இவை உருவாக்கப்பட்ட வெப்பநிலை மிகவும் வேறுபாடுடன் காணப்படுகின்றது. இது காலப்போக்கில் அந்தாட்டிக்கிலும் காணப்படலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

# மலரி வில்லை



எயிட்ஸ் நோய்க்கு மருந்தில்லை என்கிறார்கள். ஆனால், எயிட்ஸ் நோயினை ஓரளவு குணமாக்கக்கூடிய சில மருந்து வில்லைகள் தற்போது காணப்படுகின்றன.

இந்த வில்லைகள் 72 மணித்தியாலத்தில் ஓரளவு நல்ல விளைவுகளைக் காட்டுகின்றன என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

இந்த வகையான மருந்துகள் கருத்தடையையும் ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன.

காலையிலே கர்ப்பிணிகள் வாந்தி எடுத்த பின் இந்த வகையான மருந்துகளை போடுதல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு வில்லை பயன்படுத்தப்படல் வேண்டும். ஆனால், இந்த வகையான வில்லைகள் பாரிய பக்கவிளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளன.

எச்.ஐ.வி. வைரஸ் ஓரளவுக்கு இந்த வில்லைகளின் பக்கவிளைவுகளைப் பற்றி யோசிக்காது, மக்கள் இதனைப் பாவிக்கிறார்கள். இதனால், இந்த மருந்துக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு சிலர் தகாத உறவு கொண்டவுடனேயே இந்த வகை வில்லையைப் பாவிக்கிறார்கள். ஏனெனில், எயிட்ஸ் கிருமிகளை ஆரம்பத்திலேயே அழிக்கும் என்பதனால், எது எப்படி இருப்பினும் இந்த வில்லை பலதரப்பட்ட விடயங்களுக்குப் பயன்படுகின்றது.

# கூடுதலான பாடல்களுடன்

...க்களில் காணப்படக்கூடிய மூன்று நாலு என்ற சிடி ட்ரைவ்கள் எல்லாம் போய், தற்போது கூடுதலான சிடிக்களை ஒரேநேரத்தில் போடக்கூடிய ட்ரைவ்கள் வந்திருக்கின்றன. இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்வதில் முன்னிற்கின்ற மிகப்பெரிய கம்பனியாகிய டொசீபா கம்பனி - 60 டிஜிட்டல் திறன்கொண்ட ஏறக்குறைய 4.5 செ.மீ அளவுள்ள கார்ட் ட்ரைகளை உருவாக்கியிருக்கின்றது.

இந்த கார்ட் ட்ரைவ்களில் ஏறக்குறைய 15000 பாடல்கள் வரை பதிவுசெய்யக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.



## கார்ட் டிஸ்க்

இந்த டொசீபா நிறுவனம் 40 ஜிகாபைடஸ் திறன் கொணட ஒரு ட்ரைவினை உருவாக்கியிருந்தது. அது 2.5 செ.மீற்றர் அளவுளஎது. இதிலே ஏறக்குறைய 10 ஆயிரம் பாடல்களைப் பதியக் கூடியதாக இருந்தது. இதேபோல கிற்றாச்சி நிறுவனமும் 1000 ரைகளைக் கொண்டதாக உருவாகியிருக்கின்றது.

டொசீபாக் கம்பனி இப்படியான அமைப்புக்களை உருவாக்குவதனால், வானொலி ஒலிபரப்பு நிலையங்கள் மற்றும் பாடல்களைப் பதிவுசெய்யக்கூடிய நிலையங்கள் - நன்மை பெறக்கூடியவையாக இருக்கும் எனக்கூறப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டின் முடிவில் இப்படி ... மில்லியன் கணக்கில் விற்றுத்தீர்த்துவிடும் என டொசீபா கம்பனி நம்புகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்

## செமரகளை



சத்தியராஜ் படத்தில் அவருடைய தனிப்பாணி இருக்கும். ஆனால், இந்தப்படத்தில் அவருடைய வழக்கமான ரகளைகள் இல்லை. ஏற்கனவே விவேக், வடிவேலு, சத்யராஜ் கூட்டணி மீண்டும் ஒருமுறை வந்து வெற்றிபெறமுடியாது தோற்றுப் போய்விட்டது.

வெளிநாட்டு வேலைக்குச் செல்லத்துடிக்கும் சத்யராஜின் நண்பரான கலாபவன் மணி- தீயணைப்புப்படையில் வேலை செய்பவர். இருவரும் பிரமச் சாரிகள். சென்னைக்கு வேலை தேடிவரும் தேவயானியை சத்யராஜ் ஆள் மாறிக் கடத்துகின்றார்.

பின்பு அவரைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொள்கின்றார். கணவன் மனைவியாக வருபவர்களுக்கே வேலை என்று உத்தரவு போடும் ஒரு இடத்தில் வேலை பெறுவதற்காக தேவயானி, சத்யராஜ் இருவரும் கணவன் - மனைவியாக நடிக்கின்றார்கள்.

ஒருநாள் சத்யராஜிற்கு மின்சாரம் தாக்கி ஒரு விநோதமான சக்தி வந்துவிடுகின்றது. அது யார் என்ன நினைத்தாலும் அவருக்குக் கேட்டுவிடும். திடீரென இந்த சக்தி ஒரு விபத்தினால் அவரிடமிருந்து போய்விடுகின்றது.

தேவயானி இதற்கிடையில் சத்யராஜ்மேல் காதல் கொள்கின்றார். அது தெரியாமல் சத்யராஜ் வெளிநாட்டுக்கு வேலைக்குப் போகின்றார். அதன்பிறகு இருவரும் இணைந்தார்களா? இதுதான் மீதிக்கதை. படத்திற்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் சத்யராஜிற்கு ஒரு வினோத சக்தியைக் கொடுத்து, அதனைப் பறித்திருக்கின்றார்கள். சத்யராஜ், கலாபவன்மணி, தேவயானி மூவரும் நடிக்கவேயில்லை என்று சொல்லுமளவிற்கு மனதில் நிற்கக்கூடிய எந்தவிதமான காட்சிகளும் இல்லை.

புதுமுக இசையமைப்பாளர் சிம்மம் குமாரின் இசையில் ஒரு பாடல்கூட ஹிட் ஆகும் வாய்ப்பில்லை. சக்தி ஒலிப்பதிவு செய்திருக்கின்றார். கதை, திரைக்கதை எழுதி இயக்கியிருக்கின்றார் ராம். 'செமரகளை' ரகளையில்லாமல் தியேட்டரை விட்டு வெளியேறும்.

# எல்லாம் டிஜிற்றல் மயம்




ஐரோப்பிய நாடுகளில் அரைவாசி நாடுகளுக்கு மேல் இன்ரநெட் மற்றும் ஈமெயில் வசதிகளுடன் இருக்கின்றன.

ஏறக்குறைய 15 வீதமான மக்கள் அதியுயர் வேகத்தில் இன்ரநெட், ஈமெயில் மற்றும் தொலைபேசி, கேபிள் வயலெஸ் வசதிகளை நாளுக்கு நாள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்குக் காரணம் - தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சி என்று கூறமுடியும். இது கூடுதலாக ஜி.7 நாடுகளில் அதாவது - 2005 ஆம் ஆண்டில் பரவக்கூடும் என அனைவராலும் எதிர் பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையே ஐரோப்பிய நாட்டுமக்கள் தங்களிடமிருந்த அனலொக் தொலைக்காட்சிப் பெட்டிகளை எறிந்துவிட்டு, டிஜிற்றல் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குவதில் முன்னிற்கிறார்கள். ஏறக்குறைய 53 வீதமான மக்கள் இப்படி மாறிவிட்டார்கள். ஏறக்குறைய 7 மில்லியன் வாடிக்கையாளர்கள் உலகின் முன்னணித் தொலைக்காட்சி நிலையமாக ஸ்கை நிறுவனம் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தின் ஒளிபரப்பு டிஜிற்றல் சிஸ்ரம். ஆதலால், மக்களும் டிஜிற்றல் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குவதில் முன்னிற்கின்றனர்.

# வாத்து ஒன்று ஒலிகள் பல



வாத்துக்களின் குவாக் ஒலி நாட்டுக்கு நாடு வேறுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இங்கிலாந்தில் காணப்படுகின்ற வாத்துக்கள் மிகவும் தடிப்பான குரல்வளத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது.


ஆனால், சில நாடுகளில் காணப்படுகின்ற வாத்துக்களின் குரல்வளம் மெல்லியதாகக் காணப்படும். இரண்டு வெவ்வேறு விதமான வாத்துக்களை எடுத்து. அவற்றினை: வேறு வேறு நாடுகளில் வைத்துப் பார்த்தபோது, அவை அந்த நாட்டுக்குரிய குரல்வளத்தைக் கொண்டதாகவே காணப்பட்டது.

இதற்குக் காரணம்- அந்தந்த நாட்டில் காணப்படுகின்ற மக்களுடைய மொழியாற்றல். இந்த குவாக் ஒலி வாத்துக்களில் மட்டுமல்ல, அந்தந்த நாடுகளின் மொழியியல் மாற்றங்களிலும் தங்கியுள்ளது.

# மனிதனை மிஞ்சும்



நாசாவில் காணப்படுகின்ற விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி, அங்கு நிறுவப்பட்டிருக்கின்ற மிகப் பெரிய ஹபிள் தொலைக்காட்டி ஆராய்ச்சியாளர்களால் சரியாகக் கையாளப்படுவதில்லை என்றநிலை வந்திருக்கின்றது. ஆகவே, இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு மனிதர்களுக்கு பதில் இயந்திர மனிதர்களே. இதனை இயக்குவதற்கு பயன்படுத்த வேண்டும் என்று, நாசாவின் சிரேஷ்ட விஞ்ஞானிகள் கூறிக்கொண்டு வருகிறார்கள்.



# இயந்திர மனிதன்


கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஏற்பட்ட கொலம்பிய விண்வெளிக்கலத்தின் விபத்துக்கூட மனிதர்களின் அசமந்தப் போக்குத்தான் என்றும் கூறப்படுகின்றது.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யும் முகமாக, ஹபிள் தொலைக்காட்டியினுடைய முழு அமைப்பையும், இயந்திர மனிதத்துவமாக்கப்பட இருக்கிறது. இதை எதிர்த்து 27 விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள்.

எது எப்படியிருப்பினும் 2007 ஆம் ஆணடில் விண்வெளி வராகளுக்குப் பதிலாக இயந்திர மனிதாகள் களமிறக்கப்படுவது உறுதியாகிவிட்டது. முதலில் சந்திரனும், அடுத்ததாக செவ்வாய்க்கிரகமும் இயநதிர மனித சோதனைககு உட்படுத்தபபடலாம் என நம்பப்படுகின்றது.

ஆனால, மனிதாகளிலும பார்க்க விண்வெளியில இயந்திர மனிதர்களினது திறமை எவ்வாறிருக்கும் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# நிறக் குறைபாடு



விஞ்ஞானிகள் சில மனிதர்களில் காணப்படக்கூடிய நிறக் குருடு சம்பந்தமான ஆராய்சசிகளில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் நிறக்குருடடுக் குறைபாட்டால் பாதிக்கப்படடுள்ளனா எனக் கண்டறியப்படடிருக்கின்றது.


இதற்குக் காரணம் - பூமியில காணப்படுகின்ற சூழல் நிலைமைகள் தான் எனக் கூறப்படுகின்றது. கண்ணில் காணப்படுகின்ற சில கலங்கள் மட்டுமே நிறங்களை உணரக்கூடியதாக உள்ளன. ஆனால், எமது கண்களில் காணப்படுகின்ற இந்த வகையான கலங்கள் தமது சக்தியை இழந்திருக்கின்றன.

இதன் காரணமாகக் கண்கள் நிறங்களை உணர முடியாத தன்மை ஏற்பட்டிருக்கின்றது. உண்மையில் எல்லா வகையான நிறங்களும் மூன்று நிறங்களின் சேர்க்கையாலேயே உருவாகின்றது. சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறங்கள் கண்களால் இலகுவாக உணரக்கூடியதாக இருக்கின்றன.

இந்த மூன்று நிறங்களுமே மூளைக்குத் தகவல்களைக் கடத்துகின்றன.

இதில் எந்த நிறம் கண்ணினால் உணரப்படாதுவிட்டாலும், உடனடியாக நிறக்குருடு ஏற்படாது. இங்கே இருக்கின்ற சிவப்பு, பசசை ஆகிய கலங்களில் ஏறபட்ட குறைபாட்டினை நிவாத்தி செயதால, நிறங்களைப் பிரித்தறியும தனமை கண்களுக்கு அதிகரிக்கும்.

# மருந்துக் குப்பிகள்



மருந்து வில்லைகள் எல்லாம் ஒரேபோல தற்போது வருவதனால், அவற்றினை வேறுபடுத்தியறிதல் சிரமமாகின்றது. அத்துடன், மருந்துகளைச் சிறுவர்கள் கண்டபடி மாறி உட்கொள்வதனால், சொல லொணாத் துயரங்களும் ஏற்படுகின்றன.

மருந்துகளை சிறுவர்கள் தொடாதவண்ணம் வைக்கும் செயன்முறைகள் தற்போது அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதிலே ஒன்று தான் மிகப்பெரிய வில்லைக் குப்பிகளை உருவாக்கு தல்.

இந்த வில்லைக் குப்பிகளைச் சிறுவர்கள் திறக்கும் பொழுது, அவர்களுக்கு முதலில் தென்படக்கூடியது வில்லைகள் அலல. அதற்குமேலே இருக்கின்ற பகுதிதான். ஆகவே, சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் மூடியைத் திறந்து பார்த்தவுடன் அவர்கள் கைக்கு வில்லைகள் எட்டாது.

இது ஒரு உளரீதியான மாற்றத்தினை சிறுவர்களுக்குண்டு பண்ணுதல். சிலவகைக் குப்பிகள் சிறுவர்களால் திறக்கமுடியாதவாறும், அத்துடன் வயது வந்தவர்களால் இலகுவில் திறக்கக்கூடியவாறும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

சிலவேளைகளில் இதிலும் தோல்வி ஏற்பட்டாலும், தற்போது பட்டன்களுடன் கூடிய மருந்துகள் வைக்கக் கூடிய அமைப்பு வந்திருக்கின்றது. திறக்க ஒரு பட்டன் மற்றும் மூடுவதற்கு ஒரு பட்டன் என்றாலும், இது மிகவும் செலவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# காலநதியின் கரையில் ஒரு சிறுகுடில்

மனிதவாழ்வியல், இன்று செல்நெறி அறியாது தடுமாறி நிற்கிறது. பிறவிகளிலெல்லாம் சிறந்தது மனிதப் பிறவியே. ஏனைய உயிரினங்களை விட நன்மை தீமைகளைப் பகுத்து அறியக்கூடிய தனித்துவமான ஆற்றல் பெற்ற மனிதன் இன்று தகவல் தொழில்நுட்பச் சூழலில் சிக்கித்தவிக்கின்றான்.

எமது 'தமிழர் பண்பாடு' என்னும் வாழ்வியல் எமது முன்னோர்களின் ஒழுங்கான கட்டமைப்பினால் நெறிப்படுத்தப்பட்டிருந்தது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான வளர்ச்சிக்கட்டங்கள் வரையறை செய்யப்பட்டிருந்தன. இயற்கையோடு ஒட்டிய காலமாற்றங்களையும், பருவகால மாற்றங்களையும் ஊன்றிக்கவனித்து வாழ்வியல் நடைமுறைகள் சீராக வகுக்கப்பட்டிருந்தன. காலத்தின் சுழற்சியும், வாழ்க்கையின் கழிவும் ஒத்திசைவாக இருந்தன. இத்தகைய ஒருநிலை தமிழர் பண்பாடு என விதந்து பேசப்பட்டன.

இத்தகைய மென்மையான வாழ்வியல் இடையூறுகள் ஏற்பட்டபோது, நமது முன்னோர் மிகவும் நிதானமாக நம்பிக்கையுடன் செயற்பட்டனர். பண்பாட்டின் பலமான தூணாக விளங்கிய வழிபாட்டு மரபு, பிறபண்பாட்டுத் தாக்கத்தினாலும், செல்வாக்கினாலும் தொய்வடையலாயிற்று. இந்தநிலையை நன்கு விளங்கிக் கொள்வதற்கு திருக்குறள் துணை நிற்கின்றது. வள்ளுவர் இயற்றிய திருக்குறள் மனித விழு மியங்களை மீண்டும் வற்புறுத்தும் ஒரு ஒழுக்க நெறியை உணர்த்தும் நூலாக அமைந்தது. இன்று திருக்குறள் ஒரு உலக றிந்த ஒரு தமிழ் நூலாக விளங்குகின்றது. வாழ்வு பற்றிய தெளிவான பல கருத்துக்களை எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் பதிவுசெய்துள்ளது.

தமிழர் வாழ்வியலை நெறிப்படுத்தும் நோக்கில் குறள் அமைந்தது. இன்றைய முரண்பட்ட வாழ்வியலைச் செம்மைப்படுத்த திருக்குறள் வழிகாட்டுகிறது. வாழ்க்கையென்பது ஒரு தனிமனிதன் தொடர்பானது அன்று. அது மனிதனையும், அவனைச் சார்ந்தவர்களையும் இணைத்து நிற்கின்றது. காலநதியின் கரையிலே மனிதன் சமூக அமைப்புடன் நிலைத்து வாழ்வு நடத்தும் ஒரு நிறுவனம், அவனுடைய வாழ்வியல் இருவகையாக அமையலாம்.

ஒன்று தன்னை மட்டுமே எண்ணி ஏனைய யாவற்றையும் துறந்து வாழும் துறவுநிலையான வாழ்வு. மற்றது தன்னோடு இணைந்த யாவரையும் பேணும் அறவாழ்வு. இல்லற வாழ்வு என வள்ளுவரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. மேலைத்தேய வாழ்வியல் குடும்ப வாழ்வை ஒரு அறமாகப் பார்க்க வில்லை. இளமையின் சுகிப்பாகவே அது கருதப்பட்டது. ஆனால், தமிழர் வாழ்வியலில் குடும்பவாழ்வு என்பது பலரைப் பேணுகின்ற வாழ்வாகக் கருதப்பட்டது.

மனித வாழ்வு பற்றிய விளக்கத்தைத் திருக்குறள் நயம்பட எடுத்துக்கூறியுள்ளது. இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைப் பெறுதல் என்னும் மூன்று அதிகாரங்களும் வாழ்க்கையின் இயல்புநிலைகளை விளக்கிக்கூறுகின்றன.

இல்வாழ்க்கையை மேற்கொண்டவன் எல்லோருக்கும் உற்ற துணையானவன். அவனுடைய ஒழுங்குபட்ட சீரான, செம்மையான வாழ்வு மனித நாகரிக வாழ்வாக அமைந்திருந்தது. இல்வாழ்க்கையை மேற்கொண்டவன் துறவிகளையும், இறந்தவர்களையும், வறியவர்களையும் பேணுகின்ற பெருங்கடமையினை ஏற்றிருந்தான். இந்த மூவருக்கும் துணையாக நிற்கும் அவன் வாழ்வியலில் இன்னொரு ஒழுங்குநிலை பேணப்பட்டதையும் திருக்குறள் எடுத்துக்கூறுகிறது.

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்று எல்லோரையும் அடக்கிய வாழ்வியல்நடைமுறை ஒன்று பேணப்பட்டுள்ளது. அன்பையும், அறத்தையும் சிறப்பியல்பாகக் கொண்டு இல்வாழ்க்கை நடத்துவது தவத்தோர் வாழ்வைவிடச் சிறப்பானதாக மதிக்கப்பட்டது. செம்மையான இல்வாழ்க்கைக்கு வாழ்க்கைத் துணைநலமாகவரும் பெண் பேருதவி புரிவாள் எனத் திருக்குறள் விளக்கியுள்ளது. அந்தப் பெண் மனைத்தக்க மாண்பு, மனைமாட்சி, கற்புநெறி, வழிபாடு, காவல்மனம் என்னும் சிறப்பி யல்பு உடையவள். மனைவி, இல்லாள் என்ற சிறப்புப் பெயர்கள் அவளின் தகுதிப் பாட்டை உணர்த்தி நிற்கின்றன. பெண்மையின் பேராற்றலை குறள் வருமாறு எடுத்துக்கூறுகின்றது.

தற்காத்து தற்கொண்டான் பேணித் தகை -சான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்.

என்றும், எதற்கும் சோர்ந்துபோகாத பெண்மையின் பேராற்றல் இல்வாழ்க்கை செம்மையாக நடக்கத் துணைநின்றது. பெண்ணின் செயற்பாடுகள் ஆணின் கடமைகளை செம்மையாகச் செய்ய பக்கபலமாக நின்றன. பெண்மையின் மென்மையான குணவியல்புக்கு அடித்தளமாக அமைந்திருந்த பேராற்றலை திருக்குறள் எடுத்துக்காட்டி வாழ்க்கைத்துணை நலமாக அவள் இயங்கும் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

இல்வாழ்க்கையின் இன்னொரு இலக்கு புதல்வரைப் பெறுதல் எனக் குறள் கூறுகிறது. அடுத்த தலைமுறையினரை உருவாக்கும் உன்னதமான பணியை ஆணும், பெண்ணும் ஏற்றுக்கொண்டு வாழ்வியல் நடைமுறைகளைப்பேணும் மரபு நீண்டகாலமா நிலைத்திருந்தது. ஒரு மனிதன் பெறுகின்ற சிறந்த பேறாக மக்கட்பேறே கணிக்கப்பட்டது. ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும் மக்கட்செல்வம் தமிழர் பண்பாட்டில் சிறப்பாகக் கருதப்பட்டது மட்டுமன்றிப் பேணப்பட்டது. குழந்தைப் பேற்றினால் குடும்பமாக இணைந்த ஆணும், பெண்ணும் தந்தை, தாய் என்னும் உயர்ந்த தகுதிப்பாட்டைப் பெறுவதற்கு மக்கட்செல்வம் காரணமாயிற்று. இணைந்த ஆணும், பெண்ணும் இறுதிவரை உறுதியாக வாழ்வதற்கு அவர்களுடைய தாய், தந்தை என்னும் தகுதிப்பாடு துணைபுரிந்தது.

மேலைத்தேய குடும்ப வாழ்வியலில் இது வேறுபட்டிருந்தது. தனிமனித உணர்வுகளுக்கு மட்டும் மதிப்பளித்து குடும்பத்திலே கருத்துமுரண்பாடுகள் தோன்றும்போது கணவன் மனைவி தகுதிப்பாட்டை முன்னிறுத்தி திருமணமுறிவு செய்யப்பட்டது. குழந்தையின் எதிர்கால வாழ்வுக்குத் தாய், தந்தையரின் ஒன்றிணைந்த வாழ்வு இன்றியமையாதது என்பது கருத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆனால், தமிழர் வாழ்வியலில் குழந்தையின் பெற்றோர் பிரியக்கூடாது என்ற இறுக்கமான மரபு பேணப்பட்டு வந்தது.

இத்தகைய மரபுபேணலைத் திருக்குறள் உணர்வுபூர்வமாக எடுத்தியம்பியுள்ளது. இல்வாழ்க்கையில் தாய், தந்தை, மகன் என ஒன்றிணைந்து வாழும் மூவரது கடமைகளும் வகுக்கப்பட்டிருந்தன. தாயின் மகிழ்ச்சி தன் மகனை நல்லவன் என்று பிறர்சொல்லக் கேட்டபோது பெரும் மகிழ்ச்சியாயிற்று. தன்னுடைய மகனை அவையத்திலே முந்தியிருக்கும் வண்ணம் ஏற்ற பயிற்சிகளைக் கொடுப்பது தந்தையின் வாழ்வியற் கடமையாக இருந்தது. பிறர்புகழ வாழ்தல் மகனுடைய பணியாக இருந்தது. இத்தகைய ஒரு மனித வாழ்வியல் நடைமுறை நல்ல குடும்பங்களை உருவாக்கியது. அந்தக் குடும்பங்கள் ஒன்றிணைந்து சிறந்த சமூகத்தைத் தோற்றுவித்தன. சிறந்த சமூகங்களின் இணைப்பு நல்லதொரு நாடு தோன்ற வழி வகுத்தது. எனவே இல்லறம் என்னும் வாழ்வியல் நடைமுறை ஆண், பெண் இணைப்பின் பயனை ஒரு நல்ல எதிர்காலத்துத் தலைமுறையை உருவாக்கி நாட்டுக்கு அளிக்கின்ற பணியாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழர் இல்லறவாழ்வை ஒரு அறநெறியாகப் பேணியபோது வாழ்வியல் சமநிலை பேணப்பட்டது. அந்தச் சமநிலை குடும்பத்தில் நிலவியபோது எல்லா இடங்களிலும் சமநிலை தோன்றியது. இல்லறவாழ்வைச் செம்மையாக நடத்துவதற்கு முன்னோர் வகுத்துவைத்த வாழ்வியல் நடைமுறைகளை மரபாக நாம் பேணிவாழும் முறைமையொன்று பண்பாடாக நிலைத்திருந்தது. ஆனால் கடந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் மனித வாழ்வியல் பெரும் அவலத்துக்குள்ளாயிற்று.

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்கள் மனிதனின் நாளாந்தக் கடைமைகளை இலகுவாகச் செய்வதற்குத் துணை நின்றபோதிலும், மனிதனை அழிப்பதற்கும் உதவின. போட்டியும், பொறாமையும், பூசலும் மக்களிடையே தலைதூக்கின. அவற்றை வென்றெடுக்கப் போராயுதங்கள் விஞ்ஞானத்தால் உருவாக்கப்பட்டன. மனித உயிர் விலையற்ற பொருளாகிற்று. இந்த வன்முறைப்பண்பு உலகெங்கும் பரவி இந்த நூற்றாண்டின் மனித உயிரழிவு உச்சநிலையடைந்துள்ளது.

உலகம் முழுவதுமே சமாதானத்துக்கான வழி என்ன? எனப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் தமிழர் வாழ்வியலும் நெறிதவறிச் செல்லத் தொடங்கியுள்ளது. இல்லறத்தின் இனிய பண்புகள் கைவிடப்பட்டு மேலைத்தேசப் பண்பாட்டின் சுவடுகள் வழியே தமிழர் நடக்கத்தொடங்கி விட்டனர்.

குடும்பம் என்ற அழகிய கூடு சிதைக்கப்பட்டது. கூடிவாழ்ந்த குருவிகள் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து திசைமாறிப்பறந்தன. கூடு சிதைந்தபோது கீழேவிழுந்த குஞ்சுகள் தத்தளித்தன. அடைக்கலம் தேடி அலைந்து திரிந்தன. சில குருவிக்கூடுகள் சிறுவர் நலம் பேணும் இல்லங்கள் எனப் பணியேற்று அந்தக் குஞ்சுகளுக்கு இடைக்காலத் தங்கங்களை ஏற்படுத்தின. ஆனால் அவை முழுமையாக பேணும் முயற்சியில் ஈடுபட தடைகளும் சில இருந்தன. ஆதரவற்ற சிறார்களை அனைத்து அன்பு காட்டும் இல்லங்களை நடத்துவோரும் அதிகாரசபையினராக தொழிற்படலாயினர். சிறுவர் நலன்பேணல் என்ற சேவைநிலைப் போர்வையில் தமக்கொரு பதவியைப் பெறும் முனைப்புடையோர் பலர் தோன்றிச் செயற்படலாயினர்.

சிறாருக்கு வழிபாடும், பண்பாடும் பயிற்றும் கடமையேற்ற பதவியாளர் மேலைத்தேசப் பண்பாட்டையே பெரிதும் பேணுவதால் தமிழர் பண்பாடு மறக்கப்படும்நிலை வேகமாக உருவாகி வருகின்றது. இந்தநிலை நீடிப்பின் தமிழரின் எதிர்காலத்துத் தலைமுறையினர் தம்மை யாரென இனங்காட்டமுடியாமல் அடையாளமற்று அல்லலுறும் நிலை விரைவில் தோன்றும்.

இந்தநிலை தோன்றாவண்ணம் பண்புடையாளர்கள் செயற்படவேண்டியவேளை வந்துள்ளது. வழிபாடு என்னும் ஒழுங்குபட்ட செயற்பாட்டால் வாழ்வில் சமநிலைபேணும் பெரியவர்களும், சான்றோர்களும் இப்போது மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் பண்பாட்டுக் காவலர்களாகப் பணிசெய்யவேண்டும்.

எமது முன்னோடி நாவலர் எமக்கு இப்போது சிறந்த வழிகாட்டி. சிறார்கள் வழிபாட்டுப் பயிற்சியும், கல்வியும்பெற அவர் பாடசாலைகளை உருவாக்கி பணிசெய்தார். அன்று அவர் செயற்படுத்திய ஐந்தாண்டுத் திட்டம் இன்றும் தேவையானது. சிறார்களை வழிபாட்டுச் சூழலிலே வளர்த்து பண்பாட்டுக் கல்வியைப் பயிற்றி வாழ்வியல் நடைமுறைகளையும், மரபுகளையும் தெளிவாகப் புகட்ட வேண்டும். இயற்கையில் ஈடுபாடும், தூய்மையில் விருப்பும், மனித நேயத்தில் ஆழமான பற்றும் சிறார்களுக்கு அவர்கள் உடல் உள வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாதவை.

இந்தப் பண்புகள் நிறைந்த ஓர் ஊரில் சிறாருக்கு பயிற்சிப்பள்ளி அமைத்து சில ஆண்டுகள் பயிற்சி கொடுப்பின் பலனுண்டு. மனித விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணப் பண்புடைய முதியோர் சிறார்களுடன் இணையவேண்டும். கோயிற் சூழலில் ஒரு பயிற்சிக்களமாக நிறைவாழ்வு இல்லமொன்றை அமைத்து அங்கு நாவலரது திட்டத்தைச் செயற்படுத்த சேர்.பொன். இராமநாதன் அவர்களால் தொடக்கப்பட்ட 'சைவவித்தியா விருத்திச் சங்கம்' முயற்சிகளை எடுக்கின்றது.

பல சைவப்பாட்சாலை அமைத்து சிறாருக்குப் பண்பாட்டு கல்வி மரபை பயிற்றிய 'இந்துபோர்ட இராசரத்தினம்' நாவலர் வழி நின்று சைவவழிபாட்டு மரபையும், தமிழ்ப் பண்பாட்டையும் காத்தவர். அவர் வழிநின்று சைவவித்தியா விருத்திச் சங்கம் இணுவிலில் ஒரு பண்பாட்டுச் சூழலில் சிறாரின் பயிற்சியைத் தொடங்கக் கால்கோள் நடத்தியுள்ளது.

சமயப்பொறையும், தமிழ் மொழி ஆற்றலும் வாழ்வியலாகக்கொண்டு வாழும் சீர் இணுவைத் திருவூர் மக்கள் இப்பணிக்கு நல்லாதரவு வழங்க முன்வந்துள்ளனர். மேலைத்தேசப் பண்பாட்டால் சோரம் போகாத இணுவையூர் சிறாரின் எதிர்கால வாழ்வுக்கான பயிற்சியை வழங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆதரவற்றவர்க்கு ஆண்டவன் துணை நிற்பான். அவனே இணுவில் வாழ் சைவத்தமிழ் மக்கள் உருவில் சிறார் நலம்பேணப் பணியாற்ற வந்துள்ளான். இந்தப் பண்பாட்டுப் பயிற்சிக்கான முயற்சி ஏனைய ஊர்க்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தமிழர் தலையாய பண்புநலன்பேண, சமூக ஒற்றுமை நிலவ, அமைதி உருவாக காலத்தை வென்று நிற்கும் பணி இதுவே.

---

ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி -3 - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே.கணேஷ்

**முதுபெரும் எழுத்தாளரும் சிறந்த பத்திரிகையாளருமான கே.கணேஷ் அண்மையில் காலமானார் அவரின் நினைவாக இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**நாவல** : **'தீண்டாதான'** (1947):- உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரான முல்க்ராஜ் ஆனந்த அவர்கள் எழுதிய இந்தநாவல் கணேஷ் அவர்கள் மொழி பெயர்த்த ஒரேஒரு நாவலாக விளங்குகிறது.

இந்தியாவில் ஏறத்தாழ பத்துக்கோடி மக்கள் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனர். சுதந்திரம் கிடைத்தபோது, அவர்களுக்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. ஆனால், நிதர்சன சமூக வாழ்வியலில் அவர்கள் இன்னமும் ஹரிஜனங்களாகவே மதிக்கப்படுகின்றனர். மனிதப்பிறவிக்குள்ள இயல்புகள், மனோநிலை, ஆபாசங்கள், உணர்ச்சிகள் எல்லாம் தீண்டாதாரின் ஒதுக்கப்பட்ட வாழ்வில் நசுக்கப்பட்டன. அவர்களும் மனிதர்களே. மனிதருக்குரிய உணர்ச்சி மனோநிலை அவர்களுக்கும் இருக்கின்றன என்பதை தீண்டாதான் நாவலில் ஆசிரியர் அழகுற எடுத்துக்காட்டுகிறார். தலித் இலக்கியத்தின் முதலாவது நாவலாக பாரதத்தில் வெளிவந்தது இந்த நாவல் எனக் கருதப்படுகிறது.

**குறுநாவல்கள்.**

ஐந்து குறுநாவல்கள் கே.கணேஷ் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு நூலுருப் பெற்றுள்ளன.

**'அஜந்தா'**. (1964) கே.ஏ.அப்பாஸ் எழுதிய இந்தக் குறுநாவலில் ஒரு பெரியதத்துவத்தை உள்ளடக்கியிருக்கிறார். ஆசிரியர். முற்றுப்பெறாத குகையில் ஒலித்துக்கொண்டிருக்கும் புத்தபிக்குவின் உளியோசை, பரிபூரணத்தை நோக்கி மனிதன் பாடுபடவேண்டும், அவன் முன்னேறவேண்டும். என்ற உயரிய நோக்கத்தைப் போதிக்கின்றது. இந்த அஜந்தா என்னும் ஓவியத்தின் மூலம் பல வரலாற்று நிகழ்வுகளும், இனப்போராட்டங்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**'அந்தகானம்'**: (1974) அல்தாய் முஹம்மதோவ் எழுதிய இக்குறுநாவலில் அஸர்பைஜானிய நாட்டின் பாரம்பரிய உணர்வுகள் சித்திரித்துக் காட்டப்படுகின்றன. நாட்டில் என்ன தான் புரட்சி நடைபெற்று பாட்டாளி அரசு தோன்றினாலும் அந்த நாட்டுக்குரிய பாரம்பரியம் காரணமாகவும், வரலாற்றுப் பண்புகாரணமாகவும் சமூகத்தில் பல ஆண்டுகாலமாக நிலவிவந்த பழமையான சமுதாயக் கருத்துக்கள் இடம்பெற்றுக்கொண்டேதான் இருக்கின்றன. இதை உணர்த்துகின்றது இந்த குறுநாவல்.

**'இளைஞன் எர்கையின் திருமணம'**: (1990) என்ற குறுநாவல் சீன நாட்டின் பாரம்பரியத்தைச் சித்திரிக்கின்றது - அன்றைய சூழலில் வாழ்ந்த ஒரு காதல் ஜோடியின் நிகழ்விலிருந்து உதிக்கிறது. இக்கதை, பழமையில் ஊறியிருந்த சமூகத்தின் காதலனைக் கொலைசெய்தனர். இந்த நிழ்வை ஜெளசூலி என்னும் நாட்டுப்புறக் கதைகளுக்கு ஏற்ப எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்னும் மகிழ்வுதரும் முடிவில் அமைத்துள்ளார் ஆசிரியர்.

**'கூனற்பிறை'**: (1990) : முப்பதுகளில் ஏற்பட்டிருந்த சீனத்து வறுமையை படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்தக் குறுநாவல் வறுமையினால் ஏழைகுடும்பம், குடும்பத் தலைவனின் மறைவினால் குடும்பத்தில் ஏற்படும் துன்பதுயரங்களை இந்த நாவல் சித்திகரிக்கின்றது. சீனத்தினது வறுமைநிலை அக்காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதையும், அதனால் அந்தச் சமூகம் எவ்வாறு பாதிப்படைந்தது என்பதனையும் இந்தக் குறுநாவல் படம்பிடித்துக்காட்டுகின்றது.

**'உடலும் உணர்வும'**(1992): ஒரு மந்தையோட்டியின் கதை',' ஒரு பாரப்பேருந்து ஓட்டுனரின்கதை ஆகிய இருகுறு நாவல்களின் தொகுப்பிது. 1936 இல் நான்ஜின்கில் பிறந்த ஷாங்சியாங் லியாங் சீன எழுத்தாளரின் படைப்புக்கள் இவை. இவர் சீனப் பண்பாட்டுப் புரட்சியால் பாதிக்கப்பட்டவர். 1957 இல் மக்கள் நாளேட்டில் இவரது படைப்புக்களை அலசி, காமாலைக் கண்கொண்டு பார்த்து அரசியல் நோக்கம் கற்பித்து இவரை வலதுசாரி பூர்ஷுவா எனக் குற்றம் சாட்டியது. இதன் விளைவாக 10 ஆண்டுகள் பண்ணைத் தொழிலாளியாக பணிபுரியவேண்டும் என்ற உழைப்புத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், எழுதும் உரிமையும் பறிக்கப்பட்டது. 1979 முதல் இவர் மீண்டும் சுதந்திரமாக எழுதத் தொடங்கினார். இவரது 5 கதைகள் திரைப்படமாகின. இவரது ஒரு மந்தையோட்டியின் கதை பிரபலமான படைப்பு உடலும், உணர்வும் என்ற பெயரிலேயே வெளியானது. இந்தப் படைப்பு பின்னர் திரைப்படமாகி பெரும் வரவேற்பைப் பெற்றது. 1983 இல் அனைத்துலக திரைப்பட விருதினைப் பெற்றது. சிறந்த திரைப்படத்துக்கான சீனவிருதினையும் பெற்றது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## புரிந்து கொள்ளப்பட்டு வரும் ஜனாதிபதியின் தந்திரங்கள்......!

'இறுதித்தீர்வு குறித்துப் பேசிக்கொண்டே இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு முன்னுரிமை கொடுக்கத் தயார்' - இது ஜனாதிபதியின் கருத்து நிலைப்பாடு.

'இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப் புலிகளின் யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசில் இருந்து உடன் வெளியேறி விடுவோம்.' - இது ஜே.வி.பியின் எச்சரிக்கை.

'இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்து புலிகளுடன் ஜனாதிபதி பேசமுயல்வது தேசத்துரோகமாகும். இதனை நாம் கடுமையாக எதிர்ப்போம்.' - இது ஜாதிக ஹெல உறுமயவினரின் அச்சுறுத்தல்.

'பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஆட்சிக்கு முட்டுக் கொடுக்கவே ஜனாதிபதி முயல்கிறார். தமிழர் பிரச்சினையில் அவருக்கு அக்கறையில்லை....' - இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனின் கருத்து.

'ஜனாதிபதியின் உறுதி மொழிகளை இனியும் நம்புவதற்கு சிறுபான்மையினரின் கட்சிகள் தயாராக இல்லை - இது அக்கட்சியின் மூத்த தலைவர்களின் எண்ண வெளிப்பாடு.

......

மேற்குறிப்பிட்ட அனைத்துக் கருத்துக்களும் செய்தி ஊடகங்களில் வெளிவந்தவைகளாகும்.

இவையனைத்தும் இலங்கை அரசியலினதும், இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் பற்றிய சமகால நிலை குறித்தும் ஒரு தெளிவானதும், உறுதியானதுமான கண்ணோட்டத்தை எமக்கு ஏற்படுத்தப் போதுமானதாகும். மேற்குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும்போது பின்வரும் விடயங்கள் தெளிவாகின்றன.

ஜனாதிபதி பேச்சுவார்த்தையை விரும்புவது போல் காட்டிக் கொண்டு, அதனைத் தொடர்வதற்கு அத்தியாவசியமான விடயங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும் நகர்வுகளை நிபந்தனை என்ற பெயரில் முன்வைக்கத் தீவிரம் காட்டுகிறார். இறுதித் தீர்வு பற்றிய பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலும், இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த விடயங்களைப் பேசுவதற்கான நிகழ்ச்சி நிரலும் வேறுபட்ட தளத்தில் அணுகப்பட வேண்டிய விடயங்கள் என்பது பகிரங்கமான உண்மையாகும்.

ஒன்று தற்காலிக நிர்வாக ஏற்பாடு குறித்தது, அடுத்தது நிரந்தரத் தீர்வு தொடர்பானது ஏககாலத்தில் இரண்டையும் முன்னெடுக்க ஜனாதிபதி வலியுறுத்துவது அவரது அரசியல் மூலோபாயத்தின் அடிப்படையிலான திட்டத்தின் வெளிப்பாடேயாகும்.

இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அவசியமும், நியாயத்தன்மையும், சர்வதேச சமூகத்தின் அங்கீகாரமும் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வரைபின் மூலம் நன்கு தெளிவாக உணர்த்தப்பட்ட நிலையிலேயே முன்னைய அரசிடம் கையளிக்கப்பட்டது.

அது குறித்து முன்னைய அரசு பரிசீலிக்க முனையும் கட்டம் வருவதற்குள்ளேயே ஜனாதிபதி அந்த ஆட்சியைக் கலைத்தமையானது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பினை அவர் விரும்பவில்லை என்பதற்கு சான்றாக அமைந்தது.

எனவே இப்போது அவர் இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பாகப் பேசலாம் என்று கூறுவதை நம்புவது கடினமானதாகும். வெறும் வர்த்தைகள் காற்றோடு போய்விடும் உறுதியற்ற சொற்களேயாகும். இடைக்கால நிர்வாகம் என்று கூறிக்கொண்டே இறுதித்தீர்வு குறித்துப்பேச வரையறை செய்ய முனைவது மற்றொரு ராஜதந்திரப் போருக்கான சதியேயாகும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்தையும், அதன் தேவையையும் திரித்துப் பிரசாரம் செய்து தேர்தலில் இனவாத விசம்கக்கும் பிரசாரத்தை மேற்கொண்டு சிங்கள, பௌத்த மக்களிடையே இனவெறி உணர்வையூட்டி ஆட்சியைப் பிடித்தபின் இப்போது மீண்டும் சுயநல உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அழுத்தங்களின் பேரில் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துள்ள அரசு நியாயமாக நடந்து கொள்ளும் என எவரும் எதிர்பார்க்கமுடியாது.

அப்படி ஏதோ ஒரு அதிசயம் ஏற்பட்டு ஜனாதிபதி பேச விழைந்தாலும், அவர் சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திரமற்ற நிலையில் அவரது தோழமைக் கட்சிகளின் அச்சுறுத்தல்களுக்குள் அடங்கிப்போன ஒருவராக இருப்பதால் அதற்கு செயலுருக்கொடுக்க அவரால் முடியவே முடியாது.

ஆட்சியை காப்பாற்றுவதா? தேசத்தைக் காப்பாற்றுவதா? என்ற நிலையில், ஆட்சிதான் முக்கியமாகப்படுகின்ற நிலையிலேயே ஜனாதிபதி இன்று இருக்கிறார்.

தேசத்தைக் காப்பாற்ற நினைத்து நியாயமான பேச்சுவார்த்தைகளுக்கு அவர் துணிவாரேயானால் சிஹல உறுமயவின் நிழல் வடிவமான ஹெல உறுமயவினால் தேசத்துரோகியாக்கப்பட்டு விடுவார்.

எனவே தேசத்தை விட்டு விட்டு ஆட்சியைப் பாதுகாக்கவே அவர் முயற்சிப்பார்... இல்லை முயற்சிக்கிறார் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் 'பேச்சுவார்த்தையை ஆட்சிக்கு முட்டுக் கொடுக்கவே ஜனாதிபதி பயன்படுத்த முனைகிறார்' என்ற ஈழவேந்தனின் கருத்து சரியானதாகின்றது.

சிறுபான்மையினரை ஏணியாகவும், தோணியாகவும் பயன்படுத்தி விட்டு தரையிலும், கரையிலும் ஒதுக்கிவிடும் பேரினவாத ஆட்சித் தலைமைகளின் சுயநலம் சிறுபான்மைக் கட்சிகளின் தலைமைகளுக்கு இப்போது புரிந்துள்ள நிலைமையையே ஜனாதிபதியின் உறுதி மொழிகளை இனியும் நம்பத்தயாரில்லை என்ற கருத்து வெளிப்படுத்துவதாக உள்ளது

எந்த வகையில் பார்த்தாலும் ஜனாதிபதியின் அரசியல் மூலோபாயங்கள் உள்ளடக்கியுள்ள சூட்சுமங்கள் சகல தரப்பினர்களுக்கும் தெரியவந்துள்ளதாகவே உணரமுடிகின்றது.

'சிலரைப் பலகாலமும் பலரைச் சில காலமும் ஏமாற்றலாம் ஆனால், எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்றிவிட முடியாது' - இதை ஜனாதிபதி உணர்ந்து கொள்வது நல்லது.

## நாடும் நடப்பும்



செய்தி - "ஜனாதிபதியின் தற்போதைய செயற்பாடுகள் எமது தர்மராஜ்ஜிய கோட்பாடுகளுக்கு எதிரானவை. நாம் என்றாவது ஒரு நாள் தர்மராஜ்ஜிய இலக்கை அடைந்தே தீருவோம்."

- ஜாதிக ஹெல உறுமயவினர்

# விமான நிலையத்தில் 5 நாட்களாக ஒளித்திருந்த இந்தியர்கள் கைது

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் சோதனையிடும் பாதுகாப்புப் பிரிவில் கடந்த 5 நாட்களாக ஒளிந்திருந்த இரண்டு இந்தியர்களை விமானநிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இந்தியர்களும் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாக இந்தியாவுககுச் செல்லவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசி உட்பட பல்வேறு சட்டவிரோத பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் சிங்கப்பூர், இலங்கை, இந்தியா ஊடாகப் பொருட்களைக் கடத்திச் சென்று விற்பனை செய்பவர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிகப்படுகின்றது.

கைதான இரண்டு இந்தியர்களும் கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாகப் பல தடைவைகள் விமானப் போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனவும், இவர்களுக்கு பொருட்களைப் பரிசோதனை செய்யும் ஊழியர் ஒருவர் தெரிந்தவராக இருந்திருப்பார் எனவும், குறிப்பிட்ட அந்த ஊழியர் கட மைக்கு வந்தால், இவர்களது பொதிகளைச் சோதனையிடாமல் விடுவார்கள் என்ற காரணத்தினாலேயே இவரகள் 5 நாட்களும் ஒளிந்திருக்கிறார்கள் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை, இவர்கள் இருவரும் 5 நாட்களாக விமான தளத்தின் சோதனையிடும் பாதுகாப்புப் பிரிவில் ஒளிந்திருக்க விமான நிலைய ஊழியர் ஒருவர் உதவி செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்டுகிறது.

கைதான இருவரும் நேற்று நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இருவரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# வாகன கொள்வனவுகளின் போது ஆவணங்களையும் சரி பார்க்கவும்

### போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது ஆவணங்களைச் சரிபார்த்து நம்பிக்கையானவர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்வதன்மூலம் பல பிரச்சினை களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என யாழ்.மோட்டார் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது -

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வாகன ஆவணப் பரீட்சையின் போது, பல வாகனங்கள் உண்மையான ஆவணங்களைக் கொண்டிருக்கவில்லை. அத்தோடு பல வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனப் பாவனையாளர்கள் அல்லாதோரிடமிருந்து பெறப்பட்டவையாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு பதிவுசெய்யப்படாத நிறுவனங்களில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வாகன உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடும்.

வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும்போது அவற்றிறகான பதிவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதும், இலக்கத்தகடுகளைப் பெறுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம். சாரதி அனுமதிப் பத்திரங்களும் கடுமையாகப் பார்க்கப்படவுள்ளமையால் வாகனம் செலுத்தும்போது சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருப்பதும் அவசியம். அத்தோடு, வீதி ஒழுங்குகளையும் கடைப்பிடித்தல் வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர். (ப)

## அலுவலக நேரங்களை மாற்றியமைத்து வீதி நெரிசலைக் குறைக்கத் திட்டம்

அதிகரித்து வரும் போக்குவரத்துநெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் அலுவலகங்களின் வேலை நேரங்களை மாற்றுவது தொடர்பாக பொதுநிர்வாக அமைச்சும், நிதி அமைச்சும் கவனம் செலுத்தி வருகின்றன.

பொதுவாக சகல அலுவலகங்களும் ஒரே நேரத்தில் தொடங்கி ஒரே நேரத்தில் முடிவடைவதால் அதிகமான வாகன நெரிசல் ஏற்படுவதாக போக்குவரத்து பிரதி அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்தார். இதனால், வேலை நேரங்களை மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

காலையிலும், மாலையிலும், நண்பகல் வேளையிலுமே போக்குவரத்து நெரிசல் அதிகமாகவுள்ளது.

எனவே அலுவலகங்களை முன்கூட்டி தொடங்குவதன் மூலம் பெருமளவு நெரிசலைக் கட்டுப்படுத்த முடியுமென அவர் தெரிவித்தார்.

# மார்ச். ஏப்ரல் மாதங்களுக்குரிய நிவாரணங்களை வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணங்களை உடன வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.செயலகத்தால் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சமுர்த்தித் திட்டம் அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும், அரசின் அசமந்தப் போக்காலும் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது அவற்றினைத் தொடர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கைகள் [illegible] யாழ் செயலகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

மூன்று மாதங்களுக்கான நிவாரணங்கள் தற்போது உடனடியாக வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனடிப்படையில் தற்போது பெப்ரவரி மாதத்திற்கான நிவாரணம் வழங்கும் பணிகள் பூர்த்தி அடைந்து வருகிறது.

இதனால், உடனடியாக மார்ச், ஏப்ரல் மாத நிவாரணங்களை வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருப்பதால் இந்தப் பணிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவுபடுத்துவதனூடாக மக்கள் தமது பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி வன்னிப் பகுதியிலிருந்து கொள்வனவு செய்யபபடுவதால் அதுவும் சிக்கலின்றி உடனுக்குடன் பெறக்கூடியதாக இருக்கும். எனவே, நிவாரண விநியோகத்தை சீராக செய்யக்கூடியதாக இருக்கும் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தொடர்பான இந்தியக் கொள்கையை சாதகமான முறையில் மீளாய்வு செய்யவேண்டும்

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம். இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரூடாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அனுப்பிய கடிதம் இங்கு வெளியாகின்றது.

இந்த நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்தே இந்த நாட்டின் தமிழ்பேசும் மக்கள் பாகுபாடு, அடக்குமுறை போன்றவற்றால் பாதிக்கப்பட்டமை பற்றி தாங்களும், இந்திய அரசாங்கமும் முழுமையாக அறிந்திருக்கின்றீர்கள் என்று திடமாக நம்புகின்றோம்.

இவற்றுக்கெதிரான எமது ஜனநாயக மற்றும் அமைதியான போராட்டங்கள் யாவும் தொடர்ச்சியான அரசாங்கங்களினால் இராணுவ பலம் கொண்டு நசுக்கப்பட்டமை பற்றியும், தாங்கள் அறிந்திருக்கின்றீர்கள். இந்தப் போராட்டங்கள் தோல்வி கண்ட நிலையிலேயே தமிழ் மக்களின் பாதுகாப்புக் கருதி ஆயுதப் போராட்டத்தில் இறங்குவதற்கு தமிழ் இளைஞர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தமிழ் பேசும் மக்களது இந்த விடுதலைப் போராட்டத்தை விசுவாசமாகவும், அர்ப்பணிப்புடனும் தொடரும் ஏகசக்தியாவும், தனிச்சக்தியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமே திகழ்கின்றது. இதன் காரணமாகவே தமிழ்பேசும் மக்கள் கடந்த 2001, 2004 நாடாளுமன்ற தேர்தல்கள் மூலம் விடுதலைப் புலிகளை தமது ஏக பிரதிநிதிகள் என வெளிப்படையாக பிரகடனம் செய்துள்ளனர். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெற்ற அபரிதமான வெற்றி இதற்கான தெளிவான ஆணையாகும்.

தமிழ்தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்திய அரசு ஒரு சாதகமான பங்களிப்பைச் செய்யும் என்ற ஐக்கிய முற்போக்கு (யூ.பீ.ஏ.) யின் குறைந்த போது வேலைத்திட்டத்தில் (கீ.பீ.ஏ.) குறிப்பிடப்பட்டிருப்பது எமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகின்றது.

ஆயினும், இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் நீடித்து வெளியிடப்பட்ட பிரகடனம் மிகவும் துரதிஷ்டவசமானதாகும்.

முதலில் நாம் தனிப்பட்ட முறையில் அறிந்த வகையிலும் எமக்கிருக்கும் தகவல்களின் அடிப்படையிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல என்பதை உத்தரவாதமாக கூறமுடியும். மறுபுறத்தில் தமிழர்கள் இந்தியாவுடன் நினைவுக் கெட்டாத காலம் முதல் கொண்டுள்ள தமிழ் மொழி, கலாசார மற்றும் பல்வேறு உறவுகள் காரணமாக இந்தியாவுடன் சுமுகமான நட்புறவைப் பேணவே அவர்கள் முயன்று வருகின்றனர். அன்ரன் பாலசிங்கத்தினதும், சு.ப. தமிழ்ச்செல்வனினதும் கூற்றுக்கள் இதற்குச் சான்று பகரும்.

விடுதலைப்புலிகள் இந்தியாவுக்குள் ஊடுருவி பிரச்சினைகளை தோற்றுவிப்பர் என்ற அச்சமும், ஆதாரமற்றதும் எந்தச் சாட்சிய மூலமும் நிரூபிக்கபடாததாகும்.

அதேபோல், விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டை ஒரு தளமாகப் பாவித்து பெற்றொல், டீசல் என்பனவற்றை கடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டும் ஆதாரமற்றது. இப்பொருட்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி உள்ளிட்ட இந்த நாட்டின் சகல பகுதிகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆகையால் இந்தியாவிலிருந்து மட்டுமல்ல வேறெங்கிலிருந்தும் இவற்றைக் கடத்த வேண்டிய தேவை இல்லை.

விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமல்ல. அதன் பெயர் சாட்சி பகர்வது போல இந்தநாட்டின் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள், சட்டபூர்வமான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் விடுதலை உணர்வை முன்வைத்து தொடர்ச்சியாகப் போராடும் ஒரு விடுதலை இயக்கம் இதுவாகும்.

விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பது அவர்கள் தமிழ் தேசியப் பிரச்சினையை கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைப்பதில் அவர்களுக்கு உள்ள அர்ப்பணிப்பையும், திடசங்கற்பத்தையும் தெளிவாகக் காட்டி நிற்கின்றனர் என நாம் கருதுகின்றோம்.

அரசபடைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் உள்ள இராணுவ சமபலமே இலங்கை அரசை விடுதலைப் புலிகள் தலைவருடன் ஒரு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வர நிர்ப்பந்தித்தது என்பதை கருத்திற் கெடுப்பீர்கள் என்பதில் நாம் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

ஜனநாயக முறையில் தம்மால் பெருமைப் படுத்தப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்துடனும் அதன் தலைமையுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி தமது அரசியல் பிரச்சினைக்கு சமாதானமான தீர்வு எட்டப்பட வேண்டும் என வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஏங்கி நிற்கின்றார்கள். ஆகவே, மகத்தான இந்திய தேசம் இந்த விடயத்தில் நியாயமானதும், சாதகமானதுமான பங்களிப்பைச் செய்யவேண்டும் என்பதே எமது அவாவாகும். இந்த நோக்கத்தை எய்துவதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்வது ஒரு தடங்கலாகவே இருக்கும்.

எனவே தங்களை மீண்டும் பின்வருமாறு வேண்டுகின்றோம்,

அ) தமிழ்பேசும் மக்கள் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் சம்பந்தமான இந்தியக் கொள்கையை சாதகமான முறையில் மீளாய்வு செய்தல்.

ஆ) இந்தியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிப்பை மீளாய்வு செய்து அதைக் கூடிய கெதியில் இரத்துச் செய்தல்.

இ) தாமதமின்றி இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவுதல்.

ஈ) விடுதலைப்புலிகளால் கோரப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கான சாதகமான நடவடிக்கைகளை எடுத்தல்.

உ) தனி அரசுகோரி தொடர்ச்சியாகப் போராடி வந்த விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு சமஷ்டி ஆட்சிமுறையை பரிசீலிக்கத் தயார் என்ற நிலையிலும் இந்த நிலைப்பாடு ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையிலும் ஒரு அர்த்தமுள்ள சமஷ்டி அரசுமுறை மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு சாத்தியமான சகல அனுசரணை நடவடிக்கைகளாயும் எடுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்லியல்

# தொன்மை, அறிவியல், தொழில்நுட்ப வெளிப்பாடான முல்லைத்தீவின் சுடுமண் வளையக் கிணறுகள்

த.அறிவன்

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் பல ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான சுடுமண் வளையக் கிணறு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தின் தொன்மை வரலாற்றிலுள்ள சுடுமண் வளையக் கிணறு தொழில் நுட்பத்திலான ஒன்றே தண்ணிமுறிப்பில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நிலக்கீழ் நீரூற்றை கண்டறிந்து அதன படி முல்லைத்தீவு, தண்ணீரூற்று புதிய கிணறு ஒன்று தோண்டப்படுகையில் அதன் கிழக்குப்பகுதியில் இரண்டரை அடி விட்டமுடைய சுடுமண் வளையக்கிணறு கண்டுபிடிக்கப் பட்டது. இக்கிணறு அமைக்கப்பட்ட வேளையில் இருந்த மண்படையிலிருந்து பத்து அடி ஆழமாக இந்தச் சுடுமண்வளையக் கிணறு இருக்கின்றது.

வெள்ளையான கடினமான மண்ணில் 10 அடி ஆழத்துக்கு இரண்டரை விட்டத்துக்கு மிக நேர்த்தியாக உருளைவடிவில் தோண்டப் பட்ட கிணற்றில் சுமார் 2 அடி விட்டமுடைய - ஒவ்வொன்றும் ஒரு அடி உயர சுடுமண் உறைகள் இருக்கப்பட்டுள்ளன. சுடுமண் உறையின் தடிப்பு ஒரு அங்குலமாகும். இந்த சுடுமண் வளையக்கிணறு அமைக்கப்பட்ட காலத்தில் இருந்த மேற்புற மண்படையின் மேலாக 3 அடி உயரத்துக்கு வண்டல்மண் படிந்துள்ளது. இம்மண் படிவு கிணறினை மூடியிருக்கின்றது. கிணறின் அடிவரை வணடல் மண் நிறைந்துள்ளது. கிணறின் வாயில் மண்படை மேற்புற மண்படையின் அழுத்தம் காரணமாக பிறை வடிவில் உட்குவிந்துள்ளது. கிணறு முழுவதுமாக நிறைந்துள்ள வண்டல்மண்ணின் அடியில் - அதாவது சுடுமண் வளையத்தின் அடியில் மூன்று பெரிய கிரவல் கற்கள், கரித்துண்டுகள், இரும்பு உருக்குத்துண்டு 6 அங்குல விட்டமுடைய சிறியமட் கலம் ஒன்று என்பனவும் எடுக்கப்பட்டுள்ளன.

கிணறின் வாயில் மண்படையில் ஒரு தொகுதி உடைந்த மண்கலங்களும் எடுக்கப்பட்டுள்ளது. மண்வளையக்கிணறின் அடிப்பகுதியில் தற்போதும் நீரூற்று காணப்படுகின்றது.


புதிய கிணறு தோண்டப்பட்டபோது அதன் கிழக்குப்பகுதியில் வெளள மண்படிவில் வித்தியாசமாக இரணடரை அடி அகலப்பகுதியில் கறுப்பு மண்படிவைக் கண்ட மக்கள் அடிப் பகுதியில் மண்வளையத்தின் நடுப்பகுதியையும், அதனுள் இருந்து மட்கலத்தின் கழுத்துப்பகுதியையும் உடைத்து விட்டனர்.

அந்த மண் அழுத்தியதாய் மண்வளையங்கள் நெருங்குண்டு சிதைந்து கிணறின் அடிப் பகுதியை நோக்கி இறங்கிய நிலையில் - கிணறு கண்டு பிடிக்கப்பட்டது. இதனை கண்ணுற்ற அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளக்குமரன் அந்தப் பகுதிக்குச் சென்று உடைந்த பகுதிகளைச் சேகரித்தார். பின் அவரின் ஒருங்கிணைப்பில் தொல்லியல் தேடலாளர் ந.குணரட்ணம் குழுவினர் மிக நேர்த்தியாக கிணற்று மண்வளையங்களையும், மட்கலப்பகுதிகளையும் - அதனுள் இருந்த மண்ணையும் மீட்டுள்ளனர்.

பின்னர் ந.குணரட்ணம் குழுவினர் உடைநத துண்டுகளை இணைத்து - அவற்றை ஒழுங்காக்கி உள்ளனர்.

தமிழர்களிடம் இருந்த 2000 ஆம் ஆண்டு முதல் 3000 ஆம் ஆண்டுகள் வரையான பெருங் கற்காலத்தில் இந்த மண் வளையகிணறுகளை பயன்படுததியுள்ளனர். மண் உறை கிணறு எனவும் இதனை அழைக்கின்றனர். இத்தகைய சுடுமண் வளையக் கிணறு ஒன்று பூநகரி கிராஞ்சியில் இப்பொழுது மக்களால் பயன்படுததப்பட்டு வருகினறது. அதிக வளையங்களைக் கொண்ட இந்தக் கிணறு கடற்கரை மணலில் தூய நீரை அள்ளுவதற்காக அமைக்கப்பட்டதாகும். வெ.இளங்குமரனின் ஏற்பாட்டில் கிராஞ்சி சுடுமண் கிணற்றின் துண்டு ஒன்று காபன் - 14 கதிரியக்க காலக்கணிப்பு செய்யப்பட்டு அது கி.மு. 2800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறியப்பட்டது.

தமிழீழத்தில் பெருங்கற்காலத்துக்குரிய சுடுமண்வளையக்கிணறு திருநெல்வேலி மாவட்டம் காயல் ஆதிச்சாறல சார் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டது. இது காபன் - 14 காலக்கணிப்பட்டி கி.மு. 785 ஆண்டுகளுக்கு முற்பட்டது என வரையறை செய்யப் பட்டது.



இதைவிட வடக்கிந்தியாவில் அத்திரபுரத்திலும் மண்வளையக் கிணறு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. தமிழகம் வட ஆழகாடு செங்க மேட்டிலும் ஒரு உறை கிணறு கண்டு பிடிக்கப்பட்டது.

தமிழர்களின் ஒரு காலகட்ட அறிவியல் தொழில்நுட்பம் நீரூற்றைக் கண்டுபிடித்து உறை கிணறுகளை அமைத்ததாகும்.

தண்ணிமுறிப்பில் - புதிய கிணற்றுக்கு அருகான இடமொன்றில் பல ஆண்டுகளின் முன் கிணறு ஒன்று வெட்டப்பட்ட போது, தற்போது எடுக்கப்பட்ட உறை கிணறுக்குரிய மட்கலத் துண்டுகளைக் கண்டதாக இந்த கிராம ஆரம்பக் குடியேற்றவாசி ஒருவர் கூறுகின்றார்.

தண்ணிமுறிப்பின் இப்பகுதியில் பெருமளவு பெருங்கற்கால மட்கலத்துண்டுகள் காணப்படுகின்றன.

இந்த வகை மண் வளையக்கிணறு ஒன்று தமிழீழத் தாயகத்தின் தென்பகுதி மாவட்டம் ஒன்றிலும் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஒரு மண்வளையக்கிணறு தண்ணிமுறிப்பில் எடுக்கப்பட்டிருப்பதன் முக்கியத்துவம் அதன் முழுமையான தோற்றம் குறுக்குவெட்டு முகமாகக் கிடைத்ததாகும்.

இதைவிட இத்தகைய சுடுமண்வளையங்களை ஒட்டுசுட்டான் மானுருவி ஆறின் படுகையில் மூன்று ஆண்டுகளின் முன் மக்கள் கண்டுள்ளனர். ஒன்றன் மேல் ஒன்றாக இருந்த மண்வளையங்களை மக்கள் உடைத்துவிட்டனர். இந்தப்பகுதிக்கு தொல்லியல் ஆர்வலர்கள் சென்று பார்த்த போது ஆற்றுமணலால் குறித்த பகுதி மூடப்பட்டு வளையத்துண்டுகளை மட்டுமே மீட்கமுடிந்தது.

முல்லைத்தீவு நகரின் வடக்கில் கரையோர மணல் நிலத்தில் 1885ஆம் ஆண்டில் சுடுமண் வளையக்கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக ஆங்கிலேய நீர்ப்பாசனப் பொறியியலாளர் எச்.பார்ச்க், தெரிவித்தார். இது பற்றி எச்.பார்ச்க் விபரிக்கையில்-

1985ஆம் ஆண்டில் முல்லைத்தீவு நகரின் வடக்கே சிறிய தென்னந்தோட்டம் ஒன்றில் அதற்கு உரிமையாளராக இருந்தவர். உடைந்த மண்பாண்டத்துண்டுகள் இருந்த இடமொன்றைக் கண்டு அதனைத் தோண்டத்தொடங்கினார். தோண்டப்படுகையில் ஒருபெரிய சுடுமண் வளையை கண்டார். அதனை மேலும் அவர் துப்பரவு செய்த போது மண்ணினால் செய்த சுடப்பட்ட பெரியதொருவட்டத்தைக் கண்டார். அதன் அடிப்பகுதியை தேடிமுழுமையாக மணலை அள்ளியபோது - அதன் கீழ் மேலுமொரு மண்வளையம் இருப்பதை அவர் கண்டார். அதன் அடிவரை தோண்டிச் சென்ற போது அடியில் குடிநீர் சுரந்துவந்தது. மண் வளையத்தின் மேல் வளையம் அங்குல உயரமாகவும் கீழ் வளையங்கள் 8 அங்கு உயரமுடையதாகவும் உட்புற விட்டம் 3 அடியாகவும் இருந்தன. இதனுள் இலங்கையின் ஆரம்பகால நாணயமாக நீள்சதுர வடிவுடைய லக்குமிபிளேக் நாணயங்கள் 9 எடுக்கப்பட்டன. இவை கொழும்பு தொல்பொருட் சாலைக்கும் - அப்போதைய ஆங்கிலேய அரச அதிபரிடமும், பிரிட்டிஷ் தொல்பொருட்கள் சாலையிடமும் ஒப்படைக்கப்பட்டன.

முல்லைத்தீவின் மண்வளையக்கிணறு அங்கு 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்தது. தமிழ் மக்களின் தொன்மை அறிவியல் தொழில்நுட்பத்தின் வெளிப்பாடே சுடுமண் வளையக்கிணறு ஆகும்.

## வாழும் மண்வளையக்கிணறு

பூநகரியின் தெற்கே நாச்சிக்குடாவுக்கு வடக்கே கடற்கரையிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கிராஞ்சியில் 2800 ஆண்டுகள் முன்பதான சுடுமண்வளையக் கிணறு ஒன்று இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

கைவிடப்பட்ட மணல் வெளிப்பிரதேசமான கிராஞ்சி - இலங்கையின் ஆரம்ப மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்த 1871ஆம் ஆண்டில் மக்கள் எவரும் வாழாத பகுதியாக இருந்தது. 1901ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 91 பேர் இங்கிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. 1921ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 119 ஆக இது அதிகரித்தது.

1960ஆம் ஆண்டுகளில் இங்கு குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வேளை நயினாதீவு மீனவர்களுக்கு சுடுமண்வளையக் கிணறு பகுதிகள் குடியமர வழங்கப்பட்டன. இப்பிரதேசத்தினைவிட்டு அவர்கள் கடற்கரையையே அவர்கள் தாம் வாழ தெரிவு செய்தனர். இதில் குடியேறாததால் இந்தப் பகுதியில் கிராஞ்சி வாழ் மக்கள் குடியமர 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. அப்போது மண்வளையக்கிணறுக்குரிய குடும்பம் அவ்விடத்தை துப்பரவு செய்தபோது சுமார் 10 அடிக்கு மேல் உயரமான மணல் திவளியில் ஒரு துரபுலேயிருந்து குழியினுள் கிணறைக்கண்டனர். உவர் நீர் நிறைந்த அந்தப் பகுதியில் இது சிறந்த நன்னீரை கொண்டதாக இருந்தது. இந்தக் கிணறை மையமாக வைத்து அந்தக்குடும்பம் அங்கு குடியமர்ந்தது. கிணறின் மேல் மட்டத்திலிருந்து 8 அடி உயரத்துக்கு வட்டமாக சீமேந்து கற்களால் மேல் மணல் படை உயரத்துக்கு ஒரு கட்டை அவர்கள் கட்டினர். இன்றும் அதே நிலையில் அந்தக்கிணறு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மண் வளையங்களின் உட்பகுதி விட்டம் 2 1/2 அடிகளாகும். ஆழம் 4 அடிகள், அடியில் ஒரு செம்மைப்படுத்தப்பட்ட கல் உள்ளது. இதனை தளமாகக் கொண்டே மண்வளையங்கள் வைக்கப்பட்டுள்ளன. மண் வளையத்தின் மேல் அதனை உடையவிடாது சீமேந்து கட்டப்பட்டுள்ளது.

இந்தக்கிணறை இந்தப் பகுதி மக்கள் பூதம கட்டிய கிணறு என விழிக்கிறார்கள். ஆரம்பத்தில் சான்று தேடலாளர் கு.மேகநாதன் வழியாக இந்தக் கிணறு பற்றி அறிந்து இதனை கலாநிதி ப.புஸ்பரட்னம் வெளிச்சத்தில் கொண்டு வந்தார்.

ஆனால், இது ஒரு தமிழினத்தின் முக்கிய தொண்மைத் தொழில்நுட்பம் என்பதை அறிந்து இதில் கூடுதல் அக்கறை செலுத்தி தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளரின் ஏற்பாட்டில் இதன் துண்டு ஒன்று C-14 கதிரியக்கக் காலக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. இதில் இது 2800 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதியானது.

இன்றும் தமிழரிடையே 2800 ஆம் ஆண்டுகள் கழித்தும் ஒன்று வாழ்கின்றதெனில் அது இச்சுடுமண்வளையக்கிணறேயாகும். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்

# இரண்டு பிரிட்டன் நாட்டவர் உட்பட 12 பொதுமக்கள் பலி! பலர் படுகாயம்

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம் பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் இருவர் பிரிட்டன் நாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஐவர் ஈராக்கில் பணிபுரியும் கட்டட ஒப்பந்தகாரர்களெனவும், இவர்கள் ஈராக்கை மீளக்கட்டியெழுப்புவதற்காகப் பணிபுரிந்தவர்களெனவும் ஈராக்கிய பிரதமர் இயட் அல்லாவி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவமானது மிகவும் துரதிஷ்டவசமானது. மிகவும் கோழைத்தனமான முறையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் பல பொதுமக்கள் காயமடைந்ததுடன், சுற்றியிருந்த கட்டடங்களும் பாரியளவில் சேதமடைந்தன. காயமடைந்தவர்கள் அனைவரும் அங்கு நின்றவர்களால் உடனடியாகவே வாகனங்கள்மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் பிரான்ஸ், அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவதாகவும ஆனால், இதனை உறுதிப்படுத்தமுடியவில்லையெனவும செய்திகள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்களில் மூவர் வெளிநாட்டவரென பிரதமர் அல்லாவி மேலும் தெரிவித்தார்.

இதுவொரு தற்கொலைத் தாக்குதலென பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். ஆனால், நிறுத்திவைக்கப்பட்ட காரைத் தன்னியக்கக் கருவிமூலம் இயக்கியே வெடிக்க



வைககப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் பலர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும், பலர் கால்களை இழந்துள்ளதாகவும் வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜூன் 30 ஆம் திகதி ஈராக்கிற்கான இடைக்கால அரசின் அதிகாரங்கள் கையளிக்கப்படவுள்ள நிலையில்,அதிகரித்துவரும் இவ்வாறான தாக்குதல்கள் நல்லதுக்கல்லவென அமெரிக்க மற்றும் ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பிரமோஸ் ஏவுகணை மீளவும் இந்தியாவால் பரிசோதனை!

ஒலியைவிட 2 மடங்கு வேகமாகச் செல்லும் பிரமோஸ் ஏவுகணைச் சோதனை நேற்றுமுன்தினம் இந்தியாவில் வெற்றிகரமாக நடந்தது. இது இந்திய - ரஷ்ய கூட்டுத்தயாரிப்பில் உருவான ஏவுகணை ஆகும்.

இந்தியாவும், ரஷ்யாவும் கூட்டாகச் சேர்ந்து தயாரித்துள்ள பிரமோஸ் ஏவுகணை முதன்முதலாக கடந்த 2001 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி சோதித்துப்பார்க்கப்பட்டது. அதன்பிறகு பலமுறை இந்த ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டது.

300 கிலோ எடை வெடிகுண்டுடன் 290 கிலோமீற்றர் தூரம்வரை சென்றுதாக்கும் இந்த ஏவுகணை, ஒலியைவிட இருமடங்கு வேகத்தில் செல்லக்கூடியது. 8 மீற்றர் நீளமும், 3 தொன் எடையும் கொண்ட இந்த ஏவுகணையை போர்க்கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் போர்விமானத்தில் இருந்தும் செலுத்தமுடியும்.

பிரமோஸ் ஏவுகணை நேற்றுமுன்தினம் மீண்டும் சோதித்துப் பார்க்கப்பட்டது. ஒரிசா மாநிலத்தில் பாலாசூரை அடுத்துள்ள சண்டிபூர் அருகே கடலில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலில் இருந்து பகல் 12.15 மணிக்கு ஏவுகணை செலுத்தப்பட்டது.

ஏவுகணை குறிப்பிட்ட தூரம் பறந்துசென்று இலக்கைத் தாக்கியதாகவும், சோதனை வெற்றிகரமாக அமைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.




# திரிபுராவில் 24 வர்த்தகர்கள் கிளர்ச்சிக்குழுவால் கடத்தல்!

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் 24 வர்த்தகர்களை தனிநாடுகோரிப் போராடிவரும திரிபுரா தேசிய விடுதலை முன்னணி கடத்தியுள்ளதாக மாநில பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை இந்த வர்த்தகர்கள் வியாபார நிலையங்களுக்குச் சென்றுகொண்டிருந்தவேளையிலேயே கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

24 வர்த்தகர்கள் தமது வியாபார நிலையங்களுக்கு இரண்டு வாகனத்தில் சென்றுகொண்டிருந்தவேளை, வீதிக்குக்குறுக்கே மரங்களைப் போட்டு இவர்க்ளை வழிமறித்த திரிபுரா தேசிய விடுதலை முன்னணியின் ஆயுததாரிகள், இந்த வர்த்தகர்களை கடத்தியதுடன் அவர்களிடமிருந்த பொருட்களையும் கொள்ளையடித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 12 பேர் மிசோராமுக்கு அருகிலுள்ள விடுதலை முன்னணியின் முகாமிலிருந்து தப்பிவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற வீதிப்பகுதியில் திரிபுரா மாநில பொலிஸாரும் நாடாளுமன்ற பாதுகாப்புப் படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நடந்த இந்தக் கடத்தல் சம்பவத்திற்கு கிளர்ச்சிக் குழுவின் பிரதான அமைப்பின் தலைவரான பிஸ்வாமோகன் - டெப்ராமாவே பொறுப்பென திரிபுரா மாநில உயர் பொலிஸ அதிகாரி சிறிஸ்வதாவா தெரிவித்தார்.

## சீனாவிலிருந்து ஆயுததளபாடங்கள்

# சிம்பாப்வே கொள்வனவு செய்தமைக்கு எதிர்க்கட்சியினர் பலத்த கண்டனம்!



சீன அரசிடம் இருந்து 200 மில்லியன் ரூபா பெறுமதியான போர்த்தளபாடங்களை விமானப்படைக்காக சிம்பாப்வே அரசு கொள்வனவு செய்தமைக்கு சிம்பாப்வேயின் எதிர்க்கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சீன அரசிடம் இருந்து சிம்பாப்வே போர் விமானங்கள் மற்றும் 100 ஜெட் விமானங்கள் உட்பட்ட 200 மில்லியன் ரூபா பெறுமதியான போர்த்தளபாடங்களை விமானப் படைக்காகக் கொள்வனவு செய்திருக்கின்றமையை சிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சு உறுதிசெய்துள்ளது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகளின் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹைறல் முஸ்ற்செக்வா - எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது எதிர்க் கட்சிகளை அச்சுறுத்துவதற்காகவே இந்தப் போர்த்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்காக செலவிடப்பட்ட தொகையானது பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 0.25 வீதம் எனவும் தெரிவித்தார்.

இந்தப் போர்த்தளபாடங்கள் கொள்வனவு தொடர்பாக சட்டப்படி கேள்வி கோரியே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சிம்பாப்வே அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், இந்தப் போர்த்தளபாடங்கள் கொள்வனவு தொடர்பாக சிம்பாப்வே நாடாளுமன்றத்தில் எந்தத் தகவல்களும் தெரிவிக்கப்படவில்லை என சிம்பாப்வே எதிர்க் கட்சிகளின் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள சிம்பாப்வே நாட்டில் 400 வீத பண வீக்கமும், 70 வீதமாக வேலையில்லாப் பிரச்சினை நிலவிவருகின்றது. மேலும பல மில்லியன் மக்கள் வெளிநாட்டு உணவு உதவிகளையே நம்பி வாழ்கின்றார்கள்.

இந்நிலையில், சிம்பாப்வே அரசு போர்த் தளபாடங்களுக்கு 200 மில்லியன் அமெரிக்க டொடலர்களைச் செலவுசெய்துளளமை கடும் விமர்சனத்தைத் தோற்றுவித்துள்ளது.

# இஸ்ரேல் படைகள் மீதான தாக்குதலை கைவிடத் தயார்!

## அல் அக்ஸா அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

இஸ்ரேலியப்படைகள் மீதான தாக்குதலை கைவிடத்தயார் என பலஸ்தன மேற்குக் கரையில் உள்ள ஜெனின் பிரதேசத்தின் தீவிரவாதத் தலைவர் சஹாரியா சுபீடி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய வானொலிச்சேவை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலே அல் - அக்ஸா மாட்டியர்ஸ் அமைப்பின் தலைவரான சூபிடி இக்கருத்தினைத் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர் -

ஜெனின் பிரதேசத்தில் இஸ்ரேலியப் படைகள் தாக்குதல் மேற்கொள்வதனாலேயே, தாம் இஸ்ரேலியப் படைகள்மீது தாக்குதல் நடத்துவதாகவும், இஸ்ரேலியப் படைகள் தாக்குதல்களை நடத்தாத பட்சத்தில் தாம் தாக்குதல்களைக் கைவிடுவது கடினமான காரியம் இல்லை என்றும் தெரிவித்தார்.


மேலும் ஜெனின் பிரதேசத்தின் எல்லைப்புறத்திலிருந்து பின்வாங்கும் இஸ்ரேலியப் படையினர் மீண்டும் திடீரென டாங்கிகளுடன் ஜெனின் பிரதேசத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்தக்கூடாது என்றும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சுபீடியின் வீட்டினருகே உள்ள அகதிகள் முகாம் ஒன்றின் மீது இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது தமது உறுப்பினர் ஒருவர் காயப்பட்டுள்ளதாக அல் - அக்ஸா தீவிரவாதிகள் தெரிவித்துள்ள போதும், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் வழமையான ரோந்துப் பணியின்போதே ஏற்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் அல்பதா அமைப்புடன் இணைந்து செயற்படும் அல் - அக்ஸா மாட்டியஸ் இயக்கம் இது வரையில் இஸ்ரேல்மீது நூற்றுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சவுதித் தலைநகரில் வைத்து

# அமெரிக்க பிரஜை கடத்தல் கொலின் பவல் கண்டனம்!



(றியாட்)

சவுதி தலைநகர் றியாட்டில் அமெரிக்க நாட்டவர் ஒருவர் கொல்லப்பட்டும் மற்றைய ஒருவர் கடத்தப்பட்டதையும் அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின் பவல் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் -

சவுதியில் உள்ள வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் தாக்குவதென்பது, அது சவுதி அரசை நேரடியாகதாக்குவதற்குச் சமனானது எனத் தெரிவித்தார்.

சவுதிக்கு இது மிகவும் அபாயகரமான நேரம். பயங்கரவாதிகளை தோற்கடிப்பதற்கு நாம் சவுதியுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

பயங்கரவாதிகள் சவுதியின் அரச பரம்பரையை குறிவைத்து செயற்படுவதுடன், எண்ணை வளமான சவுதியின் ஸ்திரத்தன்மையை குலைப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு விடை காண்பதென்பது பிரச்சினை இல்லையென்றாலும், தற்போதைய நிலைமை மிகவும் அபாயகரமானதாகும்.

சவுதியில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் எந்த நாட்டவருக்கு எதிராக தாக்குதல் நடத்தினாலும் அது சவுதி அரசுக்கெதிராக நேரடியாக நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக சவுதி இதுவரை எடுத்துவரும் நடவடிக்கைகளையிட்டு நான் திருப்தியடைகின்றேன். இருந்தாலும் சவுதி இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அவர்கள் தமது படைகளை மேலும் கட்டியெழுப்பவேண்டும். நாம் புலனாய்வு தொடர்பான விடயங்களில் இணைந்து செயற்படவுள்ளோம். அத்துடன் சகல விடயங்களிலும் எமது செயற்பாடு உள்ளது எனவும் கொலின் பவல் மேலும் தெரிவித்தார்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சராசரிக் கடல்மட்டம் கடந்த 100 வருடங்களில் 10 தொடங்கி 25 சதம மீற்றர்களால் உயர்ந்துள்ளது. உலகின் பனிக்கட்டிகள் உருகுமானால் சமுத்திரங்கள் 66 மீற்றர்களால் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## வடக்கு - கிழக்கு பகுதி மக்களுக்கு
# விரிவான சேவைகள் வழங்குவது குறித்து சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆராய்வு!

யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மனிதாபிமான பணிகளை மேற்கொண்டு வரும் சர்வதேச நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு வெளிநாட்டு சர்வதேச நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற நிதியுதவிகளின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

குறிப்பாக இந்தப் பிரதேச மக்களுக்கு பயனளிக்கக் கூடிய சேவைகளை சிறந்த முறையில் வழங்குவது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு சேவைகள் குறித்து புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் இந்த மாநாட்டில் விளக்கமளித்தார்.

இந்த மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் விளக்கமளித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சில் இந்த மாநாடு நடைபெற்றது.

நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றதாக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.ஐ.எஸ்.அஹ்மட் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய சர்வதேச அமைப்புக்களுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ரயிலை வழிமறித்து மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரயில்வே திணைக்களத்தில் கடந்த 14 வருடங்களாக தற்காலிக ஊழியர்களாக பணிபுரியும் ரயில்வே திணைக்கள ஊழியர்கள் தம்மை நிரந்தரமாக்க கோரியும், புதிதாக பணியாளர்களை அமர்த்தியதை எதிர்த்தும் நேற்று மறியற் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு செல்லவிருந்த ரயிலை செல்லவிடாது சுமார் 150 ஊழியர்கள் வழிமறித்து இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

இந்த சம்பவத்தின்போது அங்கு சென்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் இருவரும் ஊழியர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்பின்னர் இவர்கள் இருவரும் - கொழும்பிலுள்ள ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் பிரியங்கா டீ சில்வாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினார்கள்.

ஊழியர்களை அடுத்தமாதம் கொழும்புக்கு வருமாறும் இந்தப் பிரச்சினை தொடர்பாக அவர்களுடன் பேச்சு நடத்துவதாகவும் டீ சில்வா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்தார்.

பொதுமுகாமையாளரின் இந்த தகவலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊழியர்களுக்கு தெரிவித்ததையடுத்து ஊழியர்கள் தமது மறியற் போராட்டத்தை கைவிட்டனர்.

# கரும்புலி லெப்.கேணல் கில்லறியின் நினைவுக்கல் திரை நீக்கம்!

கடந்த வருடம் ஜூலை 30 ஆம் திகதி சர்வதேச கடற்பரப்பில் இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி லெப்.கேணல் முருகேசன்/கில்லறி (கணேசன் சிவகுருநாதன் - யாழ்ப்பாணம்)யின் நினைவுக்கல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டது.

கரும்புலி லெப்.கேணல் கில்லறியின் திருவுருவப்படம் கோப்பாய் இராசவீதி சந்தியிலிருந்து நேற்று மாலை 4 மணிக்கு பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் எடுத்துச் செல்லப்பட்டு, கோப்பாய் துயிலுமில்ல மாவீரர் நினைவு மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் கோப்பாய் அரசியற்துறைப் பொறுப்பாளர் யாழவன் தலைமையில் இடம்பெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் வீரவணக்க உரைகளை கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன், நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதன்பின்னர் பி.ப 5.45 மணியளவில் மாவீரரின் நினைவுக்கல் பெற்றோரால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பெருமளவு பொதுமக்களும், போராளிகளும் கலந்துகொண்டனர்.

## ரெலோ அலுவலகம் உட்பட
# மட்டக்களப்பில் ஐந்து இடங்களில் இராணுவத்தினர் திடீர் சோதனை!

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மறைத்து வைத்துள்ளதாகத் தெரிவித்து பொலிஸாரும், இராணுவப் புலனாய்வுத்துறையினரும் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் திடீர் சோதனைகளை நடத்தினர்.

நேற்று அதிகாலை 4.30 மணி முதல் காலை 8.30 மணி வரை நடந்த இந்த சோதனையில் மட்டக்களப்பிலுள்ள ரெலோ அலுவலகம் மற்றும் தனியார் வீடுகளும் அடங்கும்.

மட்டக்களப்பிலுள்ள புதூர், மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை விதியிலுள்ள வயோதிபர் இல்லத்தருகிலுள்ள வர்த்தகரின் வீடு, வாடகைக்கு தங்கியுள்ளவர்களின் இன்னொரு வீடு ஆகியன படையினராலும், பொலிஸாராலும் சோதனை மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து நேற்றுக் காலை எட்டு மணியளவில், மட்டக்களப்பு நகரப் பகுதியிலுள்ள ரெலோ அலுவலகத்திற்கு சென்ற இராணுவப் புலனாய்வுத்துறை மற்றும் பொலிஸாரென சுமார் ஐம்பது பேர் அங்கு ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதா எனத் தேடுதல் நடத்தினர்.

இந்த தேடுதலின்போது ரெலோ அமைப்பின் செயலாளர் இந்திரகுமார் பிரசன்னாவை ரெலோ அலுவலகத்துக்கு அழைத்து அலுவலகத்தில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதா? என விசாரணை செய்தனர்.

இதன்போது ஒரு அரசியல் கட்சியின் அலுவலகத்தின் மீது எவ்வித முன்னறிவித்தலுமின்றி சோதனை நடவடிக்கையை மேற்கொண்டமையானது முறையற்ற செயலென ரெலோ செயலர் பிரசன்னா படையினரிடம் தெரிவித்தார்.

இதற்கு படையினர் தாம் நீதிமன்ற உத்தரவுக்கிணங்கவே இந்த தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக பிரசன்னா தெரிவித்தார்.

படையினரும், பொலிஸாரும் நேற்று நடத்திய தேடுதலின் போது எந்தவொரு இடத்திலும் ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை. படையினரின் இந்த சோதனைகள் குறித்து வீட்டின் உரிமையாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளனா.

### மன்னாரில் மூவர் கைது

மன்னார் கட்டுக்கரை குளத்திற்கு அண்மையாகவுள்ள அடைக்கலமோட்டை பகுதியில் 3 பேரை இராணுவத்தினர் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றுள்ளது. [illegible] (வயது 24), பரமகாந்தன் திலகன் [illegible]

# ஜனாதிபதி சந்திரிகாவின் உரை அரசியலமைப்புக்கு முரணானது!

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த சனிக்கிழமை அரச ஊடகங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை அரசியலமைப்புக்கு முரணான செயல் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உரையில் அரசாங்கத்தின் கொள்கை விளக்கங்களை வெளியிட்டுள்ளதால் இதை அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையாகவே கருதவேண்டியுள்ளது.

இது அரசியலமைப்பு சட்டத்தின்படி நாடாளுமன்றத்தில் ஆற்ற வேண்டிய உரையாகும்.

இந்த உரையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களும் இருக்குமானால், அதற்கெதிராக எதிர்க்கட்சி பெரும்பான்மையுடன் வாக்களித்தால் அரசாங்கத்தின் அமைச்சரவை பதவி விலக வேண்டிய நிலை ஏற் படும்.

இவ்வாறான சூழ்நிலையில் இதையெல்லாம் மதிக்காமல் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தை அவமதிக்கும் வகையில், அங்கு சமர்ப்பிக்கவேண்டிய கொள்கை விளக்க உரையை தொலைக்காட்சி மூலம் ஆற்றியமை அரசியலமைப்புக்கு முரணானதாகும்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக, அரசியலமைப்பை மாற்றியமைக்க குழுவொன்று நாடாளுமன்றத்தின் மூலமே தெரிவுசெய்யப்பட வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இதை மறுக்கும் வகையில் தேசிய சமாதானப் பேரவை அமைக்கப்பட் [illegible]

### ஜனாதிபதி...

சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா [illegible]

# கட்டுப்பாட்டை இழந்ததால் பிக்கப் நீரில் பாய்ந்தது!

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தினுள் பிக்கப் வாகனம் [illegible] வீழ்ந்தது.

இந்தச் சம்பவத்தின்போது சாரதியின் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்கப் நீரில் பாய்ந்தது!

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தினுள் பிக்கப் வாகனம் ஒன்று - சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வீழ்ந்ததால் சாரதி படுகாயமடைந்தார்.

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் வீதியில் வட்டுவாகல் பாலத்தின் மேலாகச் சென்றுகொண்டிருந்த பிக்கப் வாகனத்தின் சில்லொன்றிலிருந்து திடீரென காற்று வெளியேறியதால் அது பாலத்தின்கீழுள்ள நீரினுள் வீழ்ந்தது.

இந்தச் சம்பவத்தின்போது சாரதியின் தலைப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டதுடன் கையொன்றும் முறிந்தது.

காயமுற்ற அவர், முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதானா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

## மட்டக்களப்பில்...

படைத்தரப்பில் 22 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரி பிரிகேடியர் விஜய குணவர்த்தன, மட்டக்களப்பிலுள்ள 233 ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அமரதுங்க, பொலிஸ் அதிகாரி மகேஸ் சமரதிவாகர, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கிரகவ, காரைதீவு விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி உபுல் செனவிரத்ன ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பெண்...

சென்றனர். இதேவேளை இராணுவத்தினரைத் தாக்க முற்பட்டதாக பொதுமகன் ஒருவரை பொலிஸார் கைதுசெய்தனர். பெண் போராளிகள் சென்ற மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் தடுத்துவைககப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று மன்னாரில் முழுமையான ஹர்த்தால் மேற்கொள்ள பொது அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (201)

கலமோட்டை பகுதியில் 3 பேரை இராணுவத்தினர் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றுள்ளது. த.யூட் (வயது 24), பரமகாந்தன் திலகன் (வயது 30), தொம்மை (வயது 30) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

கடந்த சனியன்று திடீரென இவர்களை இராணுவத்தினர் கைதுசெய்து பலமாக தாக்கிய பின் திலகன், தொம்மை ஆகிய இருவரையும் விடுதலை செய்தனர். ஆனால் இதுவரை யூட் என்பவரை விடுதலை செய்யவில்லை இந்த சம்பவம் தொடர்பாக மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (201)

## புலிகளினது...

யிருந்தது. இந்த நிலையிலேயே நேற்று நடைபெற்ற உயர்மட்ட பாதுகாப்பு கூட்டத்தினையடுத்து இன்றும் நாளையும் முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கு இடையிலான கடற்பயணத்தை மேற்கொள்ள கடற்படை அனுமதி வழங்கியுள்ளது.

வேண்டிய உரையாகும்.

## ஜனாதிபதி...

சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா தனது மகள் யசோதரா குமாரதுங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளவே லண்டனுக்குச் சென்றிருக்கிறார்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரரான அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க வியட்நாமுக்குச் சென்றிருப்பதாகவும், இவரும் லண்டனில் ஜனாதிபதியுடன் இணைந்துகொள்ளவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வெறும் காணி ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இல 0777 - 283795

(761)


றத்தின் மூலமே தெரிவுசெய்யப்பட வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இதை மறுக்கும் வகையில் தேசிய சமாதானப் பேரவை அமைக்கப்பட்டுள்ளதாக கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுவதை நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை என்று ஐ.தே.க தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.


மெகா

புலமைப்பரிசில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகள் ஆரம்பம் விரையுங்கள் !

ASIAN COMPUTERS

யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி




பதிப்புலக வேந்தர்களே!

நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்



PCC COLOUR DIGITAL PRINTER

# நிலா பதிப்பகம்



சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION)
சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.

- 4X8 அளவுகளில் PCC கலர் பிறிண்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE

பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org